www.padippakam.com

# பனிக்குடம்

இதழ் 3 மார்ச்-ஏப்ரல் '04 ரூ.10



"உடலே இல்லாத வெளியில்
மிதந்துகொண்டிருந்தோம்"
-அம்பை

படிப்பகம்

www.padippakam.com

# விற்பனையில்...



ரூ.40




ரூ.40



ரூ.30

## பனிக்குடம் பதிப்பகம்

*பெண்ணிலக்கிய வெளியீட்டாளர்*

137 (54), இரண்டாம் தளம், ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல் : panikkudam@hotmail.com

படிப்பகம்

www.padippakam.com

பனிக்குடம் மூன்றாவது இதழ் இலங்கைப்பெண் கவிஞர் பஹீமா ஜஹான் மற்றும் கமலாதாஸின் கவிதைகள், அம்பையின் நேர்காணல் என கனமான உரையாடல்களின் உள்ளடக்கங்களுடன். பெண் கவிஞர்களுக்கு எதிராகத் தற்பொழுது எழும்பியுள்ள விமர்சன அலைகள் அவர்களுக்குச் சாதகமானதே. பலமுனைகளில் தன்னை முற்போக்கானது எனக் காட்டிக்கொள்ளும் ஆணாதிக்கச் சமுதாயம் அப்படியானது இல்லை என உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறது. நிறைய பெண் கவிஞர்கள், தமிழ்ச் சமூகம் பெண்ணின் உடலை அடிமைப்படுத்தியது வழியாகத் தொடங்கி எப்படி சிந்தனையை, வாழ்வியலை, முற்றிலுமாகக் குறுக்கியது என்பதைத் தங்கள் கவிஆய்வின் வழியாக வெளிப்படுத்த முனைந்துள்ளனர். இது ஆரோக்கியமானது.


ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com



# பஹீமா ஜஹான் கவிதைகள்



## ஒரு கடல் நீரூற்றி...

நட்சத்திரங்கள் பூத்தவானம் விரிந்திருந்தது!
எமக்குப் பின்னால்
பாதியாய் ஒளிர்ந்த நிலவு தொடர்ந்துவந்தது!
தூரத்து வயல்வெளியை மூடியிருந்தது
வெண்பனி!
தென்னைகளில் மோதி குடியிருப்புகளை ஊடுருவி
எம் செவி வழி நுழைந்தது -
வங்கக் கடலில் எழுகின்ற அலையோசை!
சந்தடி ஓய்ந்த தெருவழியே
நீயும் நானும் விடுதிவரை நடந்தோம்!

இப்படியே...
எத்தனையோ இரவுகளில்
விவாதிப்போம் நெடுநேரம்!
முடிவில், எதிர்காலம் குறித்த அவநம்பிக்கைகளுடன்
பிரிந்து செல்வோம்!

பின் வந்த, பதற்றமான பொழுதொன்றில்
உன் விடுதலை வேட்கைக்குத் தடையாயிருந்த
அனைத்தையும் உதறி அடவி புகுந்தாய்!

பரணி...
உன் நினைவுகள் தேய்ந்துகொண்டிருந்த வேளை
மாரிக்கால அந்திப் பொழுதொன்றில்
நனைந்த சீருடைகளிலிருந்து நீர் சொட்டச் சொட்ட
மீளவும் நீ வந்தாய்!

அலையெழும்பும் கடல் பரப்பினில்
உனக்கான பணி முடிக்கவென விடைபெற்றுப் போனாய்!

வாழ்த்துச் சொல்ல வாயெழவுமில்லை!
ஆரத்தழுவிட நீ விரும்பவுமில்லை!
வெளியே பெய்த மழை என் கன்னங்களில் வழிந்தோட....
மழைப்புகாரினூடே மறைந்து போனாய்!

திரைகடல் சென்ற திரவியமானாய்!
ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது - நீ
திரும்பி வரவே இல்லை!

இன்று வீரர்கள் துயிலும் சமாதிகளின் மீது
காலத்துயரின் பெருமௌனம் கவிழ்ந்துள்ளது!
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே!
இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரப்பிடவோ?

*(மூன்றாவது மனிதன் - 14, ஏப்பிரல் - மே, 2002)*

படிப்பகம்

www.padippakam.com

## தொலைவில் ஒலிக்கும் பாடல்

அடைய முடியாத் தொலைவும் நீ
தீண்ட முடியா உறவும் நீ
தொலைவிலிருந்து கேட்கும் இனிய பாடலாக உனது
குரலினை நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கிறேன்.

அசுப தேவதைகள் ஆர்சொல்லை ஆசிர்வதித்தனவோ...
சாபம் போலொரு துயரம் வாழ்வோடு சேர்ந்தது!
என் மீதிருந்த எல்லா உரிமைகளையும் விட்டு நீ
வெகுதூரம்... வெகுதூரம்... போனாய்!
மீட்சியில்லாத் துயரங்களின் முன்
நேசிப்புக்கு இடமில்லாமற் போனது!


அதீதப் புனைவுகளால் சித்திரிக்கப்பட்டுத்
தோற்றுப் போனது கடந்த காலம்
அனைத்தின் மீதும் கேள்வியெழுப்பி
வாழ விடாமற் செய்துள்ளது நிகழ்காலம்!

யார் யாராலோ விதிக்கப்பட்டதை எனக்கு
ஏற்று வாழும்படியாயிற்று
திணிக்கப்பட்டதை மறுத்ததால் உனக்குத்
தொலைதூரம் போகும்படியாயிற்று.
உன்னுலகை விட்டு நானும்
என்னுலகை விட்டு நீயும் தூரமானோம்...
எமக்கிடையே தேசதேசாந்திரங்களும்
கடல்களும் காடு, மலைகளுமாய்...

எனது விதிரேகையும் ஆயுள்ரேகையும்
அனர்த்தங்கள் குறித்து ஆரூடம் சொல்லிக்
கொண்டிருந்ததை
தாமதமாகவே அறிந்துகொண்டேன்.

மரணத்தின் தூதுவர்கள் அலைகின்ற
அதிவேகத் தெருக்களில் நீ சென்றுகொண்டிருந்தாலும்
சற்றே ஒதுங்கி நின்று
எனக்கொரு அழைப்புத் தருவாயா?
தங்க எங்கும் இடமற்று நீ வாழும் தேசம் வரை
நீண்டு நீண்டு வருகின்றன என் கனவுகள்!

*(மூன்றாவது மனிதன் - 13; ஒக். - டிச. 2001)*



படிப்பகம்

www.padippakam.com



## சிறுமியின் கோழிக்குஞ்சு

சின்னஞ்சிறு வெண்சிறகிரண்டிலும்
புழுதி படியலாயிற்று
பஞ்சு போன்ற அதன் உடலம்
ஒடுங்கிச் சிறுத்திற்று

கால்களும் உடலும் நெடுநேரம் நடுங்கிடச் சிறுமி
தனது பிரியம் துடிப்பதைப் பார்த்திருந்தாள்;
கூடி விளையாடிய அவளது பாதம்
தவறுதலாகக் குஞ்சின் தலை மீதேறியிருந்தது!

கருமுகிலே! உன் துளிகள் தூவி
அதன் மேனிக்கு வலுவூட்டு!
நீல விசும்பே! உன் குரல் கொண்டு
மீளாத்துயிலிலிருந்து அதையெழுப்பு!
வீசும் பவனமே! உனது மென்கரங்களால்
மூடிய இரு கண்மூடிகளைத் திறந்துவிடு!
இனிய குஞ்சே! வலிகளைக் காலடியில் விட்டு
குணமடைந்து எழுந்து விடு;
முறையிட்டாள் சிறுமி ஆகாயம் நோக்கி.

உயிர் பிழைத்த குஞ்சு
ஒரு கண் பார்வையிழந்து தவித்தது.
மிகுந்த சிரமத்துடன் இரை தேடித் திரிந்தது
இடையில் தவறிய வழி தேடிக் கீச்சிட்டவாறு
எங்கோ எங்கோ பார்த்தவாறு இருந்தது.

மரணத்தின் நிழல் அதன் தலைக்குமேலே
கவிழ்ந்திருந்த மறுநாளைய காலைப் பொழுதில்
கடும் பிரயத்தனத்துடன் ஒரு சொண்டுத் தண்ணீரை
அண்ணாந்து குடித்தது.
உலகில் அதற்கென ஆண்டவன் வைத்திருந்த
கடைசி நீர்த்துளி அது!

குஞ்சுடன் முன்னும் பின்னும்அலைந்த சிறுமியின்
பார்வைக்குத் தப்பித் திரிந்த மரணம்
முதலில் அதன் சின்னஞ்சிறு சிறகிரண்டிலும்
வந்தமர்ந்தது

சிறகுகள் கீழே தொங்கிட மெல்ல மெல்ல நகர்ந்தது
குஞ்சு

அந்திப் பொழுதில் சாவு அதன் கழுத்தின் மீதேறி
நின்றது

ஒரு மூதாட்டி போலச் சிறகுகள் போர்த்தி
அசைவற்றுப் படுத்தது குஞ்சு
இரவு நெடுநேரம் வரை காத்திருந்த மரணத்தின்
கரங்கள்

சிறுமி தூங்கிய பின்னர்
துண்டு நிலவும் மறைந்து வானம் இருண்ட
பொழுதில்
அந்தச் சிறு உயிரைப் பறித்துப் போயிற்று.

*(கீறல் - 4; ஜூலை - செப்டம்பர், 2002)*

படிப்பகம்

www.padippakam.com

## அம்மையே உனைக் கொன்ற பழி சுமந்தவர்களாய்...

ஆண்களை மயக்கும் மாயவித்தைகளை
நீ அறிந்திருக்கவில்லை
ஓர விழிப் பார்வைகளோ...
தலைகுனியும் தந்திரங்களோ...
உன்னிடமிருக்கவில்லை!
தெளிவும் தீட்சணியமும் உன் பார்வையிலிருந்தது
உறுதியும் தைரியமும் உன் நடையிலிருந்தது
அலங்காரமும் ஒப்பனையும் உன்னிடமில்லாதிருந்தது
எளிமையும் பரிசுத்தமும் நிரம்பியதாய் உன்
வாழ்க்கையிருந்தது!


இளம்பெண்ணாக அப்போது
வயல்வெளிகளில் மந்தைகளோட்டிச் செல்வாய்
அடர்ந்த காடுகளிலும்...
வெள்ளம் வழிந்தோடிய ஆற்றங்கரைகளிலும்...
விறகு வெட்டித் தலைமேல் சுமந்து திரும்புவாய்!
அப்போதந்தக் காடுகளில் வாழ்ந்த பேய், பிசாசுகள்
தூர இருந்து கனைத்துப் பார்த்துப் பின்
மறைந்து போவதாய்க் கதைகள் சொல்வாய்!
வீட்டிலும் வெளியிலும் உன் குரலே ஓங்கியொலித்தது!

காலப் பெருஞ்சுழியில் - நீ
திரிந்து வளர்ந்த அடவிகள் யாவும் மெல்ல அழிந்தன
பளிங்கு போல் நீரோடிய அருவிகள் யாவும்
அசுத்தமாகிப் பின் தூர்ந்து போயின
கடந்தகாலம் பற்றிய உன் கதைகளிலெல்லாம்
கசப்பான சோகம் படியலாயிற்று!

உன் பொழுதின் பெரும்பகுதி
படுக்கையில் முடங்கிப்போனது!
ஓய்வற்றுத் திரிந்த உனது பாதங்கள்
பயணிக்க முடியாத் திசைகள் பார்த்துப்
பெருமூச்செறிந்தன.
வேலைகளை எண்ணி
உனது கரங்கள் துடிக்கும் பொழுதுகளில்
இயலாமைகள் கொண்டு புலம்பத்
தொடங்குவாய்!

நோய் தீர்க்கவெனச்
சந்ததிகள் நிரம்பிய நகருக்குக்
கூட்டிவரப்பட்டாய்!
உன் காற்றும் நீரும் மண்ணும்
ஆன்மாவுமிழந்து
நகரடைந்தாய் நீ மட்டும்!
உணர்வுகள் அடங்கி ஓய்ந்தபின் ஒருநாள்
உறவுகள் கூடி உனைத் தூக்கிச் சென்றனர்...
உனக்கான மண்ணெடுத்த பூமி நோக்கி!
அம்மையே!
இப்போது நாம் வாழ்கிறோம்
எல்லோர் கையிலும் பொம்மைகளாக!

*(கீறல் - 2; 14.02.2002)*



படிப்பகம்

www.padippakam.com

## சாபங்களையகற்றிய குழிகளின் மீதிருந்து...

சாபங்களையகற்றிய குழிகளின் மீதிருந்து
காற்றிலே கரைகிறது சூனியம்!

அவர்களும் விதைத்தனர்
இவர்களும் விதைத்தனர்
எந்தப் பாதமொன்றோ தம்மீது படும்வரை
உருமலை உள்ளடக்கிக்
காலங்கள் தொறுமவை காத்துக் கிடந்தன!


தத்தித் தவழும் பாலகனோ...
ஏழைத் தாயொருத்தியோ...
இனிய இளைஞனொருவனோ...
மதகுருவோ...
மேய்ச்சலுக்குச் சென்ற மந்தையொன்றோ...
அல்லது
குறிவைத்த அவர்களிலும் இவர்களிலும் எவரோ?

அறுவடை காண மறந்த வன்னிப் பெருநிலத்தில்
நச்சுக் கிழங்குகளை நாளெல்லாம் தோண்டலாம்
நீண்ட கோடைகளிலும் மரிப்பதில்லை
மாரிகாலம் கடந்து போன பின்னும் முளைப்பதில்லை
ஏவிவிடப்பட்ட பூதங்களைத் தமக்குள் பிடித்துப்
பாதையோரங்களிலும் பொட்டல் வெளிகளிலும்
காத்திருந்தன!

நெஞ்சிலுள்ள செஞ்சிலுவை அவனைக் காத்திட
தன் கரம் சுமந்த கோலுடன்
அங்குல மங்குலமாக
வன்னிப்பெருநிலம் தடவி நச்சுக் கிழங்குகள்
தோண்டுகிறான்!

எங்கிருந்தோ வந்த தேவதூதனாய்
எம்மொழியும் அறியான்... எமதினமும்
அறியான்
அவனொருவன் சாபங்களைத் தோண்டியகற்றிய
குழிகளில்
நாமினி எதை நடப்போகிறோம்!

*(கவிப்பிரவாகம் - 1; 17.04.2002 )*



www.padippakam.com

## இருண்டுபோகின்ற நாமும் ஒளி வழங்கும் அவளும்

அவரவர் வேலைகளில் வீடு மூழ்கியிருந்த
மழைக்கால இரவொன்றில்
நிசப்தத்தையும் இருளையும்
உள் நிறுத்திப் போயிற்று மின்சாரம்

வழமை போலவே அம்மாவின் அருட்கரங்களில்
ஒளி காலும் உத்தியாக மின்சூள் அகப்பட்டிருந்தது.

இரவுச் சாப்பாட்டின் ஒரு கவளம்
மீதியாயிருந்ததென் பீங்கானில்;
கையில் தேடியெடுத்திருந்த மெழுகுவர்த்திக்குத்
தீச்சுடரொன்று தேவைப்பட்டிருந்தது இளையவளுக்கு;
எழுதிக்கொண்டிருந்த மூத்தவளுக்கோ
இறுதிச் சொல்லில் ஓரெழுத்து எஞ்சியிருந்ததப்போது!
அவரவர் தேவை கூறி அம்மாவைக்
கூப்பிட்ட கூச்சலில்



இருண்ட இல்லம் ஒலியலைகளால் நிரம்பிற்று!

முதலில் எனது பீங்கானில் விழுந்து தெறித்த
ஒளிக்கற்றைகளின் துணையுடன்
இளையவளின் மெழுகுதிரி சுடர்விட்டெரிந்தது.
மூத்தவளின் கடைசி எழுத்துக்கும் அம்மா
ஒளி காவி நடந்த பின்னர்
சட்டென நுழைந்தது வீட்டினுள் மின்சாரம்

மறுபடியும் இருளினுள் வீடமிழ்ந்தபொழுது
சமையலறையினுள் சிக்கியிருந்த அம்மாவுக்கு
ஒளிச்சுடரொன்றினை ஏந்தி யாருமே நடக்கவில்லை
எவரின் உதவியுமின்றி
இருளினுள்ளேயிருந்து
எல்லோருக்குமான உணவைத் தயாரித்தாள் எனதன்னை!

*(கவிப்ரவாகம் இதழ் - 3; 06.11.2002)*

படிப்பகம்

www.padippakam.com



## வயற்காட்டுக் காவல்காரி

அவளது தலைமீது குருவிகள் தங்கிச் செல்லலாம்;
அவளது தோள் மீதமர்ந்து கிளிகள் சத்தமிடலாம்;
எனினும், பட்சிகளைப் பயங்காட்டவே
ஓங்கிய தடியொன்று அவளது கரங்களில்
தரப்பட்டிருக்கலாம்!

யாருடைய விளைநிலமோ அது!
விதிமுறைகள் வேறில்லை -
அவள் காவல் புரிந்தாக வேண்டும்!

அவளிடம் இதயமில்லை!
அவளது விழிகளில் ஜீவனில்லை!
ஓசைகள் அவளது செவிகளில் விழுவதேயில்லை!
ஆனாலும்,
ஆடைகளும் அலங்காரங்களும்
மனிதப் படைப்பென்று காட்டவே அவளுக்குச்
சூடப்பட்டுள்ளன!

கொட்டும் மழையிலும் அவள் சிரித்துக்
கொண்டிருப்பாள்!
எரிக்கும் வெயிலிலும் இன்முகத்துடனே
இருப்பாள்!

அவளது வேதனைகளை வெளிக்காட்டும்படியாக
முகக்கோலம் அமைந்திருந்தால்
காணுகின்ற கண்களிலெல்லாம் கண்ணீர் வழியும்!
அவளுக்கு உருவினைத் தந்த
மனிதர்களின் நிம்மதிக்காகச் சிரிப்பினைத்
தீட்டியுள்ளனர்!

யாருமற்ற அமைதியான இரவுகளில்,
நிலவின் மெல்லிய கிரணங்கள்
அவளை விசாரிக்க வந்து போகும்;
அவள் அண்ணாந்து பார்த்ததேயில்லை!
நட்சத்திரங்கள் -
திசைகளையும் வாழ்வின் திருப்பங்களையும்
ஓயாது சொல்லும்;
அவள் காது கொடுத்துக் கேட்டதேயில்லை!
விடியலின் பூபாளம்
அவளைச் சுற்றியே எழும்;
அவள் வரவேற்றதேயில்லை!

இவர்களின் விதிமுறைகள்
அவளை அசையவிடமாட்டாது!

அவளைத் தாங்கிநின்ற பூமியே!
அவளைப் பரிதாபமாய்ப் பார்த்திருந்த வானமே!
அவளது மௌனமும்ஒருநாள் வெடிக்குமா?
குமுறுகின்ற எரிமலையாக...
அதிரவைக்கும் இடிமுழக்கமாக...

*(தினமுரசு - 338; ஜனவரி 2-8 - 2000)*


படிப்பகம்

www.padippakam.com

## பேறுகள் உனக்கு மட்டுமல்ல...

அவளைப் பலவீனப்படுத்த
எல்லா வியூகங்களையும் வகுத்த பின்பும்
அவளை உள்நிறுத்தி எதற்காக
இன்னுமின்னும்வேலிகளை எழுப்புகிறாய்

போரிலும் பகையிலும் முதல் பொருளாய்
அவளையே சூறையாடினாய்;
அவளுக்கே துயரிழைத்தாய்;
உன்னால் அனாதைகளாக்கப்பட்ட
குழந்தைகளையெல்லாம் அவளிடமே ஒப்படைத்தாய்;



தலைவனாகவும் தேவனாகவும் நீ
தலைநிமிர்ந்து நடந்தாய்!

எல்லா இருள்களின் மறைவிலும்
நீயே மறைந்திருந்தாய்
ஒளியின் முதல் கிரணத்தையும்
உன் முகத்திலேயே வாங்கிக்கொண்டாய்!

உனதடி பணிந்து தொழுவதில் அவளுக்கு
ஈடேற்றம் கிடைக்குமென்றாய்
கலாசாரம், பண்பாடு எனும் அரிகண்டங்களை
அவளது கழுத்தில் கௌரவமாய்ச் சூடினாய்

உனது மயக்கங்களில்
தென்றல், மலர், இசை...
தேவதை அம்சங்களென...
அவளிடம் கண்டவைகளெல்லாம் பின்னர்
மாயைகளெனப் புலம்பவும் தொடங்கினாய்.

அவளிடமிருந்த அனைத்தையும் பறித்துக்கொண்டு
சிகரங்களில் ஏறி நின்றாய்
பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு காணச் சொன்னது
உனக்கு மட்டுமென எப்படிக் கொண்டாய்?

*(யாத்ரா - 7; ஒக்டோபர் - டிஸம்பர், 2001)*

படிப்பகம்

www.padippakam.com

## குரங்குகள் பிய்த்த கூடு

இனிய குரலெடுத்துப் பாடும் உன் பாடலுடன்
வசந்த காலமொன்று என் அடவிகளில் வந்துவிடும்

துயரங்கள் நிரம்பித் தாக்கும் வேளைகளில்
வேதனையில் உன் சிரிப்பொலி எழும்போது
அகால இடிமுழக்கத்தில் என் வானம் அதிரும்

ஏதோ ஒரு ஆறுதலில் நீ
என் கிளைகளில் தாவிக் குரலெழுப்பும்போது
கார்காலமொன்று எனது வேர்களைச் சூழும்


மரணத்தைப் பற்றியும்
நிலையற்ற வாழ்வின் நியதிகள் பற்றியும்
மகானைப்போல நீ போதிக்கும் தருணங்களில்
கடும் கோடை காலமொன்று என்
கால்களைச் சுற்றி வந்து பெருமூச்செறியும்

ஆனாலும் அன்பே...
இலையுதிர் காலத்தில் விக்கித்து நின்றபோது
ஓராயிரம் இலைகளும் உதிர்ந்து போகையில்
என்னிடம் புன்னகைக்கக் கெஞ்சிய
உன் கீச்சிடலுடன்
பனித்துளிகள் சொரிந்திடலாயின.

வாழ்வளித்த நிழலை நின் புலன்களில் தேக்கி
இனிய குஞ்சுடன் தொலைதூரம் பறந்து போகையில்
எனது உயிர்க்குரல் ஓய்ந்து போயிற்று.

நீ வாழ்ந்த கூட்டைக் குரங்குகள் பிய்த்தெறிந்தன
நான் மரமென நின்றிருக்கிறேன்
துயரங்களையும் எதிர்ப்பையும் கூறிட
எனக்கொரு மொழியின்றி...

*(யாத்ரா - 10; ஜூலை - ஒக்டோபர், 2002)*



ஓவியங்கள் : கே.பெனிட்டா பெர்ஷியாள்

படிப்பகம்

www.padippakam.com



ஓர் ஆன்மா அதற்கான சமுதாயத்தைத்
தேர்ந்தெடுத்துக்கொள்கிறாள். பின்
இனி எப்போதுமே இருந்திடாத
அவளுடைய தெய்வப்பெரும்பான்மைக்குத்
தனது கதவுகளை இழுத்து மூடுகிறாள்.

**எமிலி டிக்கின்ஸன்**
***(1839 - 1886)***

படிப்பகம்

www.padippakam.com



# 'உடலே இல்லாத ஒரு வெளியில் மிதந்துகொண்டிருந்தோம்'

பெண்ணியம் தொடர்பான கேள்விகளுக்கு அம்பையின் எழுத்துவடிவிலான பதில்கள்



தமிழ் நவீனப் பெண்ணிலக்கியத்தில் அம்பையின் தடம் அழுத்தமானது. அவரது பெண்ணியச் சிந்தனையின் ஆழ்ந்த பயணங்களும் சுயவிசாரணைகளும்தாம் பெண்ணியத்தைத் தனது வாழ்க்கையோடு இயைந்த கூறாக முழுமையும் நோக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் அழைத்துச்சென்றன. அம்பையின் இந்தப் பதில்கள் அந்தப் பயண வழியினூடே ஜன்னல் வழிகண்ட வனக்காட்சிகளின் பதிவுகள்ஃ

**உங்களுடைய எழுத்துக்களில் 'பெண்ணியம்' சார்ந்த கருத்தியல்களைப் பதிவுசெய்ய உந்துதலாய் இருந்தது எது?**

குறிப்பிட்ட ஒன்று உந்துதலாக இருந்ததாகச் சொல்ல முடியாது. வாழ்க்கை வாழப்படும் விதத்தை நாம் உணர்வது, சொந்த வாழ்க்கையில் செய்யும் தேர்வுகள், ஏற்படும் அனுபவங்கள், சமூக சரித்திரம் பற்றிய பிரக்ஞை இவை எல்லாம் ஒரு படைப்பாளியின் பின் உள்ளன. மேலும், கதை எழுதும்போது 'இந்தக் கதையில் பெண்ணியம் சார்ந்த கருத்தியல்களைப் பதிவுசெய்யப்போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு எழுத முடியாது. கதைகள் அப்படி அமைவதில்லை. கவிதையும் அப்படி அமைவதில்லை என்று உனக்குத் தெரியாதா, ரேவூ? கண்ணுக்குப் புலப்படாத எல்லைக்கோடுகளுடன் சுயம், வாழ்க்கை, சரித்திரம், அரசியல் எல்லாம் கலந்த ஓர் இடம் வெளிப்பாடு. இது நேரும்போது கதை, கதையாக அமைய வேண்டும். கவிதை, கவிதையாக, உருவாக வேண்டும் என்ற முனைப்புத்தான் இருக்க முடியும். குறிப்பிட்ட ஓர் உந்துதல் அல்லது உந்துதல்கள் மட்டுமே ஒரு படைப்பாளியை இயக்க முடியாது.

**பெண்ணியக் கருத்தாக்கத்திற்குட்பட்டு நீங்கள் சில முடிவுகளை எடுத்துச் செயல்படும் போது, அவை சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு எதிராகக்கூட சில சமயங்களில் செல்வதுண்டு. அதை எப்படி எதிர்கொள்கிறீர்கள்?**

நான் முடிவுகள் எடுக்கும்போது அந்தத் தருணத்தில், அந்தக் காலகட்டத்தில் நான் சரி என்று நம்புவதைப் பொறுத்து, முடிவுகளை எடுக்கிறேனே ஒழிய அது பெண்ணியக் கருத்தாக்கத்துக்கு உட்பட்டதா என்று சீர்தூக்கிப் பார்ப்பதில்லை. இதற்குக் காரணம் பெண்ணியக் கருத்தாக்கம் என் வாழ்க்கையின் வெளியே ஒரு கருத்தாக்கமாக மட்டுமே இருப்பதாக நான் நினைக்கவில்லை; அது என் வாழ்க்கையில் ஒன்றிக் கலந்திருப்பதாகவே நினைக்கிறேன். அது பெண்ணியக் கருத்தாக்கம் என்று உணரும் முன்பே நான் சில முடிவுகளை எடுத்தேன். இதற்குக் காரணம் ஒரு பெண் எந்த வகையிலும் அவள் கௌரவமானது, மரியாதைக்குரியது என்று கருதும் மட்டத்திலிருந்து கீழே தள்ளப் படக்கூடாது என்பது எனக்கு மிக முக்கிய மானதாகப் பட்டது. நான் எடுத்த எல்லா முடிவுகளும் குழப்பமும் முரணும் இல்லாதவை என்றும் கூற முடியாது. என்னை நானே எடை-

படிப்பகம்

www.padippakam.com

போட்டுக்கொள்ளும்போது குழப்பமும் முரணும் என்னைப் பாதித்தபோது முடிவுகளை மாற்றியிருக்கிறேன் - அந்த மாற்றத்தின் அத்தனை வலிகளையும் ஏற்றுக்கொண்டு; நான் நம்பும் ஒன்றிற்கான விலையைத் தந்து.

சிறுமியாக இருக்கும்போதே திருமணம் என்ற பந்தத்திற்கும் அதனுடன் வரும் மற்ற விஷயங்களுக்கும் நான் முற்றிலும் லாயக்கில்லாதவள் என்ற ஓர் உணர்வு ஏற்பட்டு விட்டது. எனக்கு ஓர் அக்காள் இருந்ததால் நான் கூறியதை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஐம்பதுகளில் வளர்ந்த என்னைப் போன்றவர்கள் மனதில் சமூகச்சேவை என்ற சொல் மிகவும் புனிதமாகப் படிந்திருந்தது. தியாகம் என்ற சொல் எங்களை வெகுவாக ஈர்த்தது. சுதந்திரம் கிடைத்தபின் வந்த தசாப்தத்தில் நாங்கள் வளர்ந்தோம் என்பதை நீ மறக்கக் கூடாது. என் பள்ளியில் இருந்த பாதி டீச்சர்கள் படிப்பித்தல் என்பதைத் தங்கள் வாழ்க்கையாகத் தேர்வு செய்து திருமணத்தை ஒதுக்கியவர்கள். சிலர் விதவையான பின் படித்து டீச்சரானவர்கள். தொண்டு, சேவை, தியாகம், நாடு போன்ற சொற்கள் எங்கள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருந்தன. வாழ்க்கை பற்றிய எண்ணங்கள், கற்பனைகள் இதை ஒட்டியதாகவே இருந்தன. எங்கள் கனவுநாயகன் அப்போது தாகூர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் இவர்களின் கலவை. நியாயமான கோபம், கனிவு, மென்மை, கலை இவற்றின் மொத்த உரு. அவன் பெங்காலி. கலைஞன். கவிஞன். நாட்டுக்காக உழைப்பவன். இந்த ஆண் நடுத்தரக் குடும்பங்களில் ஏற்கப்படாதவன். தியாக மனப்பான்மையை ஒட்டிய வேறு கற்பனைகளும் உண்டு. உடல் ஊனமுற்ற லட்சிய புருஷனைச் சக்கர நாற்காலியில் தள்ளியபடி ''தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்...'' என்று பாடியபடி போவது போலவும் கற்பனை செய்ததுண்டு. நளாயனி போன்ற பிம்பங்களிலிருந்து அதிகம் விலகாத கற்பனைகள். மிகவும் வயதான கிழவனை (கிழவனுக்கு வயது ஐம்பதுதான்! அந்த வயதில் ஐம்பது வயதுக்காரன் எல்லாம் படுகிழம்.) மணக்க ஒப்பி, மணவறையிலேயே அந்தக் கிழவன் மரித்துவிடுவான். ஆனால் அவன் பணக்காரக் கிழவன். அவன் சொத்து அத்தனைக்கும் வாரிசு நான். உடனே விதவையாகி, சேவையில் ஈடுபடுவேன்! நீ கூர்ந்து

> "குறிப்பிட்ட ஓர் உந்துதல் அல்லது உந்துதல்கள் மட்டுமே ஒரு படைப்பாளியை இயக்க முடியாது"

கவனித்தால் அத்தனை கற்பனைகளிலும் உடல் என்ற ஒன்று விலக்கப்பட்டுள்ளது உனக்குத் தெரியும். உடலே இல்லாத ஒரு வெளியில் மிதந்துகொண்டிருந்தோம்.

இந்த இதமான கற்பனைகளிலிருந்து வெளியே வந்போது ஒன்று தெளிவாகத் தெரிந்தது. என் காலில் நான் நிற்க வேண்டுமானால் மிகவும் முக்கியமானது கல்வி. அடுத்தது வாழ்க்கை பற்றிய பட்டுணர்வு. வீட்டைவிட்டு வெளியேற, கல்வியை விட நல்ல சாக்கு இருக்க முடியாது. வீட்டைவிட்டு வெளியேற, கல்வியை நான் பயன்படுத்திக்கொண்டேன். வீட்டில் இதற்கு எதிர்ப்பு இருந்தது. ஒரு முறை வீட்டைவிட்டு வெளியேறினால் நான் திரும்ப வரமாட்டேன் என்று அஞ்சினார்கள். அவர்கள் பயந்தது போலவே நான் வீட்டுக்குத் திரும்பவில்லை. வீட்டுக்கு வந்துபோய்க்கொண்டிருந்தேனே ஒழிய என் வாழ்க்கை வீட்டின் வெளியே என் போக்கில் இருந்தது.

தனியே வாழ்ந்து உலகை எதிர்கொண்ட போதுதான் உடல் என்ற ஒன்று ஒரு பிரும்மாண்டமாய் என்னைத் தாக்கியது. எல்லாவித விளக்கங்களையும் தவிர்த்து என் உடலின் மொழியை, அதன் ஓசைகளை நான் கேட்க முற்பட்டேன். ஒரு சில ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நான் எழுதிய கதைகள் வேறு மாதிரி அமைந்தன. இந்தக் காலகட்டத்தில் நட்பு பூணுவதில், உறவுகள் ஏற்படுத்திக்கொள்வதில் நான் பல தவறுகளைச் செய்தேன். நான் சந்தித்த

படிப்பகம்

www.padippakam.com

"

தனியே வாழ்ந்து உலகை
எதிர்கொண்ட போதுதான்
உடல் என்ற ஒன்று
ஒரு பிருமாண்டமாய்
என்னைத் தாக்கியது

"

ஆண்கள் என்னைப் போலவே நிறைகுறைகள் உள்ளவர்களாக இருந்தார்கள். பல உறவுகள் முறிந்தன. ஆனால் இவை அத்தனையும் நான் செய்த தவறுகள். அதனால் அவற்றை என்னால் ஏற்க முடிந்தது. அதன் விளைவுகளைச் சந்திக்க முடிந்தது. எனக்கு நானே உண்மையானவளாக இருப்பது எனக்கு முக்கியமானதாகப்பட்டது. அடிக்கடி எனக்கு நானே சொல்லிக்கொள்வேன்: ''இதோ பார் லக்ஷ்மி, உனக்கு நீதான் துணை. சோர்வடையாதே''. என்னைப் பற்றிய பல சேதிகள் விடு வரை அரசல்புரசலாக எட்டின. வீட்டில் யாரும் என்னிடம் நேரிடையாக எதையும் கேட்கவில்லை. ஒரே ஒரு முறை என் அம்மா என்னிடம் சற்று சுற்றிவளைத்து நான் கன்னிதானா என்று விசாரித்தார். ''அம்மா, நான் கன்னிதான் என்றால் நீங்கள் நம்பப் போவ தில்லை. கன்னி இல்லை என்றால் வருத்தப் படுவீர்கள். அதனால் இது பற்றிப் பேச வேண்டாம்'' என்றேன். ''தனியாக இருக்கும் பெண் நெருப்புபோல் இருக்கவேண்டும்'' என்றார். ''நெருப்பு போல்தான் இருக்கிறேன், என்னைப் பொறுத்தவரை'' என்று கூறி முடித்துவிட்டேன். வீட்டாரை விட வெளியார் செய்த விமர்சனங்களும் கண்டனங்களும் அதிகம். இவர்களில் சிலர் எழுத்தாளர்கள், கவிஞர்கள். இந்த அத்தனை ஆண்டுகளிலும் என்னிடம் தொடர்ந்து நட்பு பூண்டு இருந்தவர் ஆர்.சூடாமணி. என்னைவிடப் பெரியவர். இருந்தாலும் அவர் ஏற்காத விஷயங்களைக் கூட, செவிமடுத்து, என்னை என் போக்கில் வளர விட்டவர். எங்கள் நட்பின் தன்மை மாறியபடி இருந்தது, காலப்போக்கில். நான் எந்தவித ஒளிவுமறைவும் இல்லாமல் அவருடன் பழக முடிந்தது. இப்போதும் இந்த நட்பு என் வாழ்க்கையில் ஓர் இளைப்பாறும் இடமாகவே இருக்கிறது.

**ஆண்கள் பெண்களுக்கு (பெண் சமுதாயத்திற்கு) எதிராக இழைத்த கொடுமை களில் மிகவும் குரூரமானது எது என நினைக் கிறீர்கள்?**

ஆண்வழிச் சமுதாயம், அதில் தொக்கி நிற்கும் மதிப்பீடுகள் இவைதான் பெண் களுக்குக் கொடுமை இழைத்திருப்பதாக நினைக் கிறேன். பெண்ணின் உடலும் அதை ஒட்டிய தேர்வுகளும் பெண்ணின் வசம் இல்லாமல் இருப்பதுதான் ஆண்வழிச் சமுதாயம் இழைத் திருக்கும் குரூரம் என்று நினைக்கிறேன். இச்சை யிலிருந்து தாய்மை வரை பெண்ணின் உடல் அவள் ஆளுமையில் இல்லாதிருப்பது அவள் உடலை மற்றவர்கள் அவரவர் விருப்பத்திற் கேற்ப விளக்கிக்கொள்ள அனுமதி அளிக்கிறது.

**இன்றைய தமிழ்ச் சூழலில் பெண்களின் எழுத்துக்கள் எந்த அளவிற்கு உண்மையாக உள்ளன?**

உண்மையாக இருப்பது என்றால் என்ன குட்டி? எண்ணங்களுக்கா, வாழ்க்கைக்கா, சுற்றியுள்ள யதார்த்தத்துக்கா, எதற்கு? எழுத்து என்பது இதற்கு எல்லாம் உண்மையாக இருப்பது என்று நினைக்கிறாயா? போலி அல்லாத எழுத்து என்று நீ சொல்ல நினைக் கிறாய் என்றால் எது போலி, எது உண்மை என்பதைப் பாகுபடுத்தக் காலம்தான் உதவ முடியும். மேலும் சில சமயம் ஒரு வெளிப் பாட்டின் போலித்தனத்தை நம் நுண்ணுணர் வால் மட்டுமே நாம் உணர முடியும். 'உண்மை' என்று நீ நினைப்பது 'சந்தையுடன் உடன் படாமை' என்ற அர்த்தத்தில் நீ சொல்லி இருந் தால், இது பெண், ஆண் இருவர் எழுத்துக்கும் பொதுவான அளவுகோல் இல்லையா? இந்த அளவுகோல் மிகவும் ஒழுக்க உணர்வை ஒட்டி இருக்கிறது. இதை நாம் வேறு மாதிரி பார்க்க லாம். இன்றைய சூழலில் பெண்களின் எழுத்தின் மொழியும், உள்ளடக்கமும் எவ்வளவு தூரம் அவர்கள் சுயதேர்வாக இருக்கிறது? விருதுக் கெடுபிடி, பிரசுரிப்பதற்கான கெடுபிடி,

படிப்பகம்

www.padippakam.com

புகழுக்கான கெடுபிடி, இவை எல்லாம் இல்லாமல் வெளிப்பாடு ஒன்றையே குறியாகக் கொண்டுள்ளது என்று வேண்டுமானால் பார்க்க முடியும். ஆனால் இதுவும் பால்தன்மை அற்ற ஓர் அளவுகோல்தான். ஏனென்றால் வாழ்க்கையில் உள்ள 'உண்மைகளை'ப் பற்றியது அல்ல இலக்கியம். உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது இலக்கியம். மேலும் இந்த 'உண்மை'யின் தன்மை மாறியபடி இருக்கிறது, நம் வாழ்வில். அழகியநாயகி அம்மாளின் குடும்பச் சரித்திரம் நமக்கு இலக்கியமாகப்படுவதற்குக் காரணம், அது உண்மையைக் கூறுவதால் மட்டும் அல்ல. சில உண்மைகளைக் கூறி சிலவற்றைக் கூறாமல் விடுவதாலும்தான். அதாவது உண்மையை அது அணுகும் முறையினால் அது இலக்கியமாகிறது. உண்மையான காதல் கடிதங்களை, உண்மையாகவே வெளியிட்டுக்கொள்கிறார்கள் சிலர். அதில் துளிக்கூட உண்மை இல்லை என்று எனக்குப்பட்டது. அதை எழுதியபோது அது இலக்கியமாகலாம் என்ற உணர்வுடன் வெகு கவனத்துடன், 'குப்பை'களைத் தவிர்த்து எழுதப்பட்டதால் அக்கடிதங்கள் எழுதப்பட்டபோதும் பொய், பிரசுரிக்கப்பட்டபோதும் பொய் என்றே எனக்குத் தோன்றியது. அக் கடிதங்களின் மொழி நேர்த்தியாக இருந்தது என்றும், அவை காதல் கடிதங்களுக்கு ஓர் உதாரணம் என்றும் பலர் என்னிடம் சொன்னார்கள். அக்கடிதங்களில் வழக்கமான தனிமை போன்ற சங்ககால விஷயங்கள் இருந்தனவே ஒழிய காதலின் உத்வேகம், இச்சைகள், கோபதாபங்கள், அதீதம் என்று எதுவும் இருக்கவில்லை. இவை எல்லாம் இருந்தால்தான் காதல் என்று நான் காதலை ஒரு விளக்கத்திற்கு உட்படுத்துகிறேன் என்று நினைக்காதே. ஒவ்வொருவரும் காதலை ஒவ்வொரு மாதிரி உணருகிறோம், இல்லையா? அந்த உணர்வின் வெப்பமும் தண்மையும் சுடுமூச்சும் தகிப்பும் சுகமும் நபருக்கு நபர் மாறுபடுகிறது, இல்லையா? அந்தக் காலகட்டத்தின் மற்ற நிகழ்வுகளும் அதில் கலக்கின்றன, அல்லவா? அவற்றை நாம் எப்படி மொழியாக்குகிறோம் என்பதுதான் இலக்கியம். அவற்றின் வெளிப்படை சில சமயங்களிலும் அவற்றின் மறைப்பு சில சமயங்களிலும் உணர்வுகளை இலக்கியமாக்குகிறது. இந்த வெளிப்படை - மறைப்பு இவற்றின் கண்ணாமூச்சி விளையாட்டுதான் இலக்கியம். ஒரு கடிதம் எழுதும்போது நாம்

"பெண்ணின் உடலும் அதை ஒட்டிய தேர்வுகளும் பெண்ணின் வசம் இல்லாமல் இருப்பதுதான் ஆண்வழிச் சமுதாயம் இழைத்திருக்கும் குரூரம் என்று நினைக்கிறேன்..."

இதை எல்லாம் நினைத்துக்கொண்டு இருக்க முடியாது. அப்படி வலிந்து நினைத்து எழுதும்போது அது எழுதப்படும் கணத்தில் பொய்யாகவும் பிரசுரிக்கும்போது இன்னொரு பொய்யாகவும் மாறிவிடுகிறது என்றே நினைக்கிறேன்.

தான் நினைப்பதை, உணர்வதை, அப்படியே வெளிப்பாடாக்கலாம். ஆக்கியிருக்கிறார்கள் சிலர். அதைப் படிக்க முடியவில்லையே! அனுபவத்துக்கும் வெளிப்பாடுக்கும் இடையே அனுபவத்திலிருந்து பிறந்த, அதை நினைவூட்டும், அதன் பொழிவாக ஆனால் முற்றிலும் வேறு தோற்றத்தில் மாறும் ஓர் உருமாற்றம் நேர்கிறது. நவீன ஓவியம் மூலத்தைச் சுட்டிக்காட்டி - ஆனால் மூலத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டு இருப்பதைப் போல - அதை ஒவ்வொருவரும் அவரவர் புரிதலுக்கேற்ப அர்த்தப்படுத்திக்கொள்கிறோம், இல்லையா? 'ஓ, இது எனக்குப் புரிகிறது. இது எனக்கு நேர்ந்திருக்கிறது அல்லது இந்த நேர்வை என்னால் விளங்கிக்கொள்ள முடிகிறது' என்று அதனுடன் ஒன்றுகிறோம் இல்லையா, அத்தகைய அனுபவத்தை நீ 'உண்மையான இலக்கியம்' என்று அடையாளமிடும் இலக்கியம் செய்யும். நவீன ஓவியத்தில் நுழைய பல கதவுகள் இருப்பது போல் இதற்கும் உண்டு. வண்ணம், கோடு, கீற்று, வடிவம் எதையாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு ஓவியத்தினுள் நுழைந்துவிடலாம். இசையிலும் அப்படித்தான். ஆதார ராகம் பற்றி எதுவும் தெரியாமலே கூட

படிப்பகம்

www.padippakam.com

"'பின்தொடரும் நிழலின் குரலி'ல் ஒரு கதாபாத்திரம், தனியாக இருக்கும் பெண் பாலூட்டும் இரு முலைகளுடையவளாகவும் பல பெண்கள் கூடி இருக்கும்போது அவர்கள் பெருச்சாளிகள் போல் இருப்பதாகவும் கூறுவார்"

அதனுள் முங்கலாம். சுருதியின் சுத்தம், ஸ்வரங்களின் விஸ்தரிப்பு என்று பல உண்மைகளை அது உருவாக்கிக்கொண்டே போகிறது. இலக்கியமும் இதைச் செய்கிறது. இப்படித்தான் நான் அதைப் புரிந்துகொள்கிறேன்.

**ஆண்களின் எழுத்துக்கும் பெண்களின் எழுத்துக்கும் அடிப்படையாக உள்ள வித்தியாசங்கள் என்ன?**

எனக்குத் தெரியவில்லை, ரேவு! அடிப்படை என்ற சொல்லும் எனக்கு உடன்பாடில்லை. அடிப்படை என்ற சொல் நேராக உடலைப்போய் முட்டும் சொல். ஒரு வகை உடல் இருப்பதால் ஒரு வகை மொழி பிறக்கிறது என்று வலியுறுத்தும் சொல். இவைதான் வித்தியாசங்கள் என்று நான் ஒன்று, இரண்டு, மூன்று என்று பட்டியலிட்டால் அது இருவகை வெளிப்பாட்டை மட்டுமல்ல, இருவகை உடல்களையும் குறுக்குகிறது. ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு காலத்தில் வேறுவேறு வகையில் உணரும் ஒன்றை, ஓர் இலக்கணத்திற்கு, விளக்கத்திற்கு உட்படுத்தி கட்டிப்போடுகிறது. இது எனக்கு உடன்பாடில்லை. எல்லைகள் என்றும் என்னிடம் எதிர்ப்புணர்வையே உண்டாக்குகின்றன. ஆனால் பெண்ணாக வாழ்வதால், பெண் என்ற நிலையிலிருந்து உலகை எதிர்கொள்ள நேர்வதால் ஒருவித மொழி, ஒருவித வெளிப்பாடு உருவாகலாம். அதேபோல் ஆண் என்ற சமூக நிலையிலிருந்து எழுதுவதால் ஒருவித மொழி பிறக்கலாம். சில உதாரணங்களைச் சொல்கிறேன்.

என் ஆராய்ச்சிக்காக நான் பல பெண்களின் கதைகளைப் படிக்க நேர்ந்தது. ஆண்களுடையதையும் படிக்க நேர்ந்தது. சில விஷயங்கள் என்னைச் சிந்திக்க வைத்தன. நிறம், வடிவம் போன்ற விஷயங்கள். ஆண்களை விவரிக்கும்போது அவர்களுக்கான உபமானங்கள் தேக்கு மரம், உலக்கை, பாறாங்கல் போன்றவையாக இருந்தன, ஆண்கள் எழுத்தில். அதேசமயம் பெண்கள், கொடிகள், மிரளும் மான், பூக்கள், பழங்கள் என்று சித்திரிக்கப்பட்டனர். வேர்கள் ஆழப் புதைந்தும் கனத்துடன் கூடியும் உள்ள பொருட்கள் ஆண்களைக் குறித்தன. எடை இல்லாமல், மற்றவற்றைச் சார்ந்து, மற்றவர்களுக்குக் களிப்பையும் சுகத்தையும் தரும் பொருட்கள் பெண்களுக்கு உவமைகள் ஆயின. நிறத்தைப் பொறுத்தவரை, சிவந்த, அல்லது சந்தன நிறம் உடைய பெண்தான் அழகு என்று கொள்ளப்பட்டாள். ''அவள் கறுப்பு ஆனாலும் அழகு'' என்ற விவரணை சாதாரணமாகப் பல கதைகளில் இருந்தது. இதில் விஷயம் என்னவென்றால் பல பெண்களும் தங்களை இவ்வாறே விளக்கப்படுத்திக்கொண்டார்கள். அப்படி அவர்கள் விளக்கப்படுத்திக்கொண்டதும் அவர்கள் சமுதாயச்சார்பு நிலையையே எனக்குச் சுட்டிக்காட்டியது. அந்தச் சார்பு நிலையை ஒட்டியே மொழியும் அமைந்தது என்று தோன்றியது. வேறு சில உபமானங்களும் சுவையாக இருந்தன. ஒரு பெண் எழுதும்போது 'மனம் பால்போல் பொங்கியது' அல்லது 'உலைநீர்போல் கொதித்தது' என்று இயல்பாக உவமைகள் வந்தன. 'கடல்போல் அவள் மனம் ஆர்ப்பரித்தது' அல்லது 'அருவிபோல் பொங்கியது' போன்ற உவமைகள் பெண்கள் எழுத்தில் அதிகம் காணக் கிடைக்கவில்லை. பட்டுக் கருநீலப்புடவை அணிந்த பெண் கூட ஆகாயத்துடன் அதை ஒப்பிடவில்லை. இரவில் ஆகாயத்தைப் பல மணிநேரம் வெறித்துப் பார்த்திருந்தால் அப்படி ஒப்பிட்டிருப்பாளோ என்னவோ?

பல ஆண்கள், பெண்களைச் சுவைக்கும் ஒன்றாகப் பார்த்தனர். உதடுகள் கோவைக் கனி, கண்கள் திராட்சைப் பழம், முலைகள் மாம்பழம் என்று எல்லாம் ஒரே சாப்பாட்டுச் சமாசாரம் தான்! மணியன் ஒரு கதையில் திருமணமாகாத

படிப்பகம்

www.padippakam.com

முதிர்கன்னியை 'ஊசிப்போன பண்டம்' என்று வர்ணிப்பார். பெண்கள் எழுத்தில் ஆண்களைச் சாப்பிடும் வகையில் எதுவும் இல்லை. அவர்களுக்கு விருந்து படைக்கும் வைபவம்தான்! 'பின்தொடரும் நிழலின் குரலி'ல் ஒரு கதாபாத்திரம், தனியாக இருக்கும் பெண் பாலூட்டும் இரு முலைகளுடையவளாகவும் பல பெண்கள் கூடி இருக்கும்போது அவர்கள் பெருச்சாளிகள் போல் இருப்பதாகவும் கூறுவார். ஊட்டும் தொழிலைத் துறந்து விட்டால் பெருச்சாளிகளாவதுதான் வழி போலும்!

இருப்பு, உலகம், வாழ்க்கை, சமூகம் இவை பற்றிய உணர்வுநிலையை ஒட்டியே வெளிப்பாடு அமைகிறது. பல ஆண் எழுத்தாளர்கள் பெண்கள் வாழ்க்கை பற்றி, அவர்கள் உணர்வுகள் பற்றி சிறப்பாகவே எழுதி உள்ளார்கள். இதற்கும் பெண்கள் தங்கள் வாழ்க்கை பற்றி எழுதுவதற்கும் வித்தியாசம் உண்டு. பெண் வேடம் போட்ட ஆண் நடிகர்களுக்குச் சற்று அதிகப்படியாகப் பெண்ணாக வேண்டிய அவசியம் இருக்கிறது. 'தத்ரூபமாய், பெண்ணாகவே இருக்கிறானே!' என்ற விமர்சனத்திற்குத் தங்களைத் தகுதியாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. பால கந்தர்வா போன்ற ஆண் நடிகர்கள் பெண்களுக்கான மோஸ்தர்களைக்கூட உண்டாக்கினார்கள் என்பார்கள். ஆண் உருவாக்கின பெண்ணாய் பெண் மாறி அதைத் தன் இயல்பாக்கிக்கொள்வது என்பது எத்தனை படிமங்களில் பெண் உருவாகிறாள் என்பதைத் தெளிவாக்குகிறது. இந்தத் 'தத்ரூபமான பெண்'ணாக மாறும் மிகை, அந்த முனைப்பு, வலியுறுத்தல் இவற்றை ஆண் எழுத்தில் நாம் காணமுடியும். ஒரு பிச்சைக்காரன் தன்னைப் பற்றி எழுதினால் தன் அழுக்குச் சால்வை, பரட்டைத் தலை, வளைந்த நகம் இவை பற்றி எழுத மாட்டான். அவை அவனுக்கு இயல்பானவை. அன்றாட வாழ்க்கையுடன் பிணைந்தவை. ஆனால் அவன் வாழ்க்கை பற்றிய 'உண்மையை' எழுத விரும்புபவர்கள் இதை எழுதாமல் விடமுடியாது. பெண்கள் சில விஷயங்களை எழுதாமல் தவிர்த்ததற்குக் காரணம், அவற்றை உணராததால் அல்ல, அவை அவர்களுக்கு மிக அருகே இருந்ததால், அவற்றை நோக்க முடியாமல் போனதுதான் என்று நினைக்கிறேன்.

> "பெண்ணியம் என்பது பெண்ணின் உடல் சார்ந்தது அல்ல. உடல் பற்றிய பட்டுணர்வைச் சார்ந்தது. உடல் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கும் இடத்தைச் சார்ந்தது..."

**பெண்ணியம் என்பது பெண்ணின் உடல் சார்ந்தது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?**

பெண்ணியம் என்பது பெண்ணின் உடல் சார்ந்தது அல்ல. உடல் பற்றிய பட்டுணர்வைச் சார்ந்தது. உடல் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கும் இடத்தைச் சார்ந்தது. காலம், சரித்திரம் இவை தொடப்படாத உடல் இல்லை, பெண் உடல். குழந்தை உடல், இளம் பெண் உடல், தாயின் உடல், தாயாகாத உடல், வயோதிக உடல், நோய்வாய்ப்பட்ட உடல், ஆரோக்கியமான உடல், உடலுக்கான இன்பங்களை அனுபவித்த உடல், அவற்றைத் தவிர்த்த உடல், சாதி அடையாளம் உள்ள உடல், பலாத்காரத்துக்கு உட்பட்ட உடல் என்று உடல்கள் பலதரப்பட்டவை. உடல் பற்றிய உணர்வுகளும் பலதரப்பட்டவை. எந்தவித வித்தியாசமும் அற்ற ஒற்றை உடலாய், ஒரே குணங்கள் உடையதாய்ப் பெண் உடலைப் பார்ப்பது சரித்திரத்தைப் புறக்கணிக்கும் செயல். ஹெலன் ஸிஸ்யூ போன்றவர்கள் உடலில் ஊறும் ரசங்களால் எழுதுவது - பால், மாதவிடாய்க் குருதி போன்றவை - என்று கூறும்போது அதை ஓர் எதிர்வினைச்செயலாகவே நோக்க வேண்டும். அதாவது, 'இதுதான் பெண் என்று நீ என்னைக் குறுக்கினால் அதையே ஒரு பிரும்மாண்டமாக்கிக் காட்டுகிறேன் பார்' என்று கூறும் செயலாக அதைப் பார்க்கலாம். ஆனால் அதில் ஏற்கனவே கருப்பையை மையப்படுத்தி அடையாளப்படுத்திய பெண் உடலில் மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com

"எழுத்து என்ற ஒன்றை அவர் தேர்வு செய்தது என்னைப் பொறுத்தவரை ஒரு சரித்திர நிகழ்வு. அவர் கதைகளைப் பற்றி என் கருத்தைக் கேட்டால் அதை நான் கதைகளை வைத்துத்தான் செய்ய முடியும்."

புகுந்துகொள்ளும் அபாயம் இருக்கிறது. அந்தக் குறுக்கலை ஏற்கும் நிலை இருக்கிறது. அது மட்டுமில்லை. இதுதான் நான் என்று அடையாளப்படுத்திக்கொண்டு நிலைபட்டபின் அது இல்லாத மற்ற உடல்களை விலக்கும் உதாசீனம் இருக்கிறது. பால் இல்லாத, மாத விடாய்க் குருதி நின்றுபோன பெண்கள் எதைக் கொண்டு எழுதுவார்களாம்? இப்படிப் பெண்ணின் உடலைக் குறுக்குவது இதுவரை இருந்த விளக்கங்களுக்கு உள்ளேயே பெண்ணை இருத்தும் செயல்தான். ஒரு காலகட்டத்தில் பனிக்குடத்தைப் பிரதானப்படுத்துவது தவறு அல்ல. ஆனால் பனிக்குடமே பெண் உடல் அல்ல. பனிக்குடமே இல்லாத, பனிக்குடத்தைச் சுமக்காத ஏகப்பட்ட பெண் உடல்கள் உண்டு. புற்றுநோய்க்காக அறுவைச்சிகிச்சை செய்து கொண்டு முலைகளை இழந்த பெண்கள் உண்டு. ஒரு வகை உடலையோ, ஓர் அங்கத்தையோ நாம் பிரதானப்படுத்தும்போது சிலரைக் கூட்டிக் கொண்டு சிலரை ஒதுக்குகிறோம். பெண் உடலை மறுவாசிப்பு செய்யலாம், அவரவர் பட்டுணர்வை ஒட்டி. அப்போதுதான் அதன் லட்சக்கணக்கான அர்த்தங்களும், அழகுகளும் வெளிவரும். அழகு என்பதன் அர்த்தங்கள் மாறும். பெண் உடல் அதற்குரிய சரித்திர இடத்தைப் பெறும். அதன் தகுதியைப் பெறும்.

**உன் கவிதைகளில் நீ இந்த மறுவாசிப்பை மிக நேர்த்தியாகச் செய்கிறாய். உடலை ஒரு வெளியாக்கி, அதில் பயணம் போகிறாய். முலைகளை 'இன்னும் சிந்தாமல் தளும்பும் கண்ணீர்த் துளிகள்' என்கிறாய். இப்போது கண்டனம் செய்யப்பட்டுள்ள அத்தனை பெண் கவிஞர்களும் இந்த மறுவாசிப்பை அவரவர் உடல் பற்றிய பட்டுணர்வுக்கேற்பச் செய்திருக் கிறார்கள். இவை மிகவும் முக்கியமானவை; சரித்திரம் படைப்பவை.**

**இப்போது நீங்கள் செய்துகொண்டி ருக்கும் Oral history documentation எந்த வகையில் எதிரொலிகளை ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்கள்? இதற்கு முன் இதுபோன்ற பெண்ணின் சித்திரங்களும், சரித்திரங்களும் பதிவுசெய்யப்படாமல் இருந்ததற்கான அரசியல் காரணங்கள் என்ன?**

Oral history documentation இதுவரை எழுதப்படாத சரித்திரத்தை வெளிக்கொணரும் ஒரு முயற்சிதான். பெண்களின் வாழ்க்கை என்பது எவ்வளவு வகைப்பட்டது, அவை படைக்கும் சரித்திரம் எத்தகையது என்பதைக் கூறும் முயற்சி. இத்தகைய சரித்திரங்கள் நம் வாழ்க்கையில் உள்ள பலவகைத் தேர்வுகள், தீர்மானங்கள், முடிவுகள், கற்பனைகள், செயல்பாடுகள் இவற்றை நாமே தொடர்ந்து தெரிந்துகொள்ள உதவும் என்று நினைக்கிறேன். நம் சொந்த செயல்பாடுகளைக் குறித்து அடக்கம் பயில நமக்கு உதவும் என்று நினைக்கிறேன். இதற்கு முன்பு இத்தகைய பதிவுகள் செய்யப் படாததற்குக் காரணங்கள் தெள்ளத் தெளி வானவை. '72இல் பெண் எழுத்தாளர்களைப் பற்றிய ஆராய்ச்சியை நான் மேற்கொண்டபோது ''உங்களுக்கு வேறு முக்கியமான விஷயம் எதுவும் கிடைக்கவில்லையா?'' என்று கேட்டார் கள். பெண்கள் சம்பந்தப்பட்ட எதுவும் முக்கியத் துவம் இல்லாதது என்றே கருதப்பட்டது; கருதப்படுகிறது. இப்போதும் நாங்கள் சில பெண்களைப் பேட்டி காணப்போகும்போது அவர்கள் வீட்டார் அல்லது சுற்றியுள்ளவர்கள் ''இவள் என்ன செய்துவிட்டாள் என்று இவளைப் பேட்டி காண்கிறீர்கள்?'' என்று கேட்பதுண்டு. அந்தப் பெண் ஒரு மருத்துவச்சி யாக இருக்கலாம் அல்லது நிலஉரிமைக்குப் போராடிய ஓர் ஆதிவாசியாக இருக்கலாம்; ஓர் எழுத்தாளராக இருக்கலாம்.

தொடர்ந்து நடக்கும் ஏய்ப்பு இது. இப்போதும் நாங்கள் செய்வது மேம்பாட்டைச் சேர்ந்த செயலாகக் கருதப்படவில்லை. மேம்பாடு என்றால் எண்ணிக்கையில் சேர்க்கக்

படிப்பகம்

www.padippakam.com

கூடியவற்றை வினியோகம் செய்வது.

***நீங்கள் வெகுஜன பெண் எழுத்துக்களை யும் தீவிர இலக்கியம் சார்ந்த பெண் எழுத்துக் களையும் வேறுபடுத்திப் பார்க்காமல், பெண் கள் எழுத்துச் சூழலுக்கு வருவதே முக்கிய மென்று நினைப்பது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. இதற்கான காரணங்கள் என்ன?***

இந்தக் கேள்வி என்னை ஆச்சரியப்படுத்து கிறது. பெண்கள் எழுத்துச் சூழலுக்கு வருவது மிக முக்கியம் என்று நான் கட்டாயம் நினைக் கிறேன். ஆனால் அவர்கள் எழுத்தை எடை போட அது ஒன்றே தகுதி என்று நான் எப்போ தும் கூறியதில்லையே! ஒரு பெண் எழுத்துச் சூழலுக்கு வருவது என்பது ஒரு சரித்திர நிகழ்வு. சுயமாக விதித்துக்கொண்ட, மற்றவர்கள் விதித்த பல தடைகளை மீறி வெளிப்பாடு எனும் பிரதேசத்துக்கு வருகிறாள் ஒரு பெண். அந்தச் செயல் பாராட்டுக்குரியது. உற்சாகப்படுத்தப்பட வேண்டியது. ஆனால் இந்தக் கஷ்டங்களைப் பட்டதாலேயே அவள் எழுத்து உயர்ந்து விடாது. தரத்தைப் பொறுத்தவரை துன்பத்துக்கும் வெளிப்பாட்டுக்கும் எந்தவித நேரடித் தொடர் பும் கிடையாது. தாங்க முடியாத சோகங்களை அனுபவித்து விட்டு, தாங்க முடியாத இலக்கியங் களைப் படைத்தவர்கள் இருக்கிறார்கள். எழுத் தின் தரத்தை எடைபோடும்போது எழுத்தாளரின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஓர் அளவுகோலாகக் கொள்ள முடியாது. ஆனால் அந்த வாழ்க்கைச் சரித்திரம் ஒரு சரித்திரக் கண்ணியாகக் கட்டாயம் இருக்கும். ஓர் உதாரணம் தருகிறேன். ஒரு கன்னடப் பெண் எழுத்தாளரை நாங்கள் பேட்டி கண்டோம். அவர் வாழ்க்கையில் அவர் படாத இன்னல்கள் இல்லை. பலமுறை தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்திருக்கிறார். கையில் பணமும் இல்லாத ஏழ்மை. விதவை. எழுத்து என்ற ஒரே விஷயம்தான் அவரை இன்னும் உயிருடன் வைத்திருக்கிறது என்றார். மாபெரும் இலக்கியம் ஏதும் அவர் எழுதி விடவில்லை. ஆனால் எழுத்து என்ற ஒன்றை அவர் தேர்வு செய்தது என்னைப் பொறுத்தவரை ஒரு சரித்திர நிகழ்வு. அவர் கதைகளைப் பற்றி என் கருத்தைக் கேட்டால் அதை நான் கதைகளை வைத்துத்தான் செய்ய முடியும். துன்பப்பட்ட தற்காக எந்த சலுகைகளையும் தரமுடியாது. அப்படித் தருவது நான் அவருக்கு இழைக்கும் ஓர் அவமானமாகவே கருதுகிறேன். எனக்குத் தெரிந்த ஓர் எழுத்தாளரை ஒரு விமர்சகர் வெகுவாகப் புகழ்ந்து கூறுவார். ஒருமுறை ''பாவம், அவங்க உடல்நிலை சரியாக இல்லாமல் இருப்பவராம். அவரைக் கடுமை யாக விமர்சிக்க விரும்பவில்லை'' என்று கூறி யிருக்கிறார். ''இதைவிட அதிகமாக அவர் என்னை அவமதித்திருக்க முடியாது. கடுமை யான விமர்சனங்களை என்னால் ஏற்றிருக்க முடியும். அவர் புகழ்ந்ததை ஏற்க முடிய வில்லை'' என்று அந்த எழுத்தாளர் என்னிடம் கூறினார், ஒரு முறை.

> “எழுத்தைச் சமூக சரித்திரத்தின் ஓர் அம்சமாகப் பார்ப்பதற்கும் இலக்கியமாகப் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு”

எழுத்தைச் சமூக சரித்திரத்தின் ஓர் அம்ச மாகப் பார்ப்பதற்கும், இலக்கியமாகப் பார்ப்ப தற்கும் நிறைய வித்தியாசம் உண்டு, பெண்ணே!

**மற்ற மொழி மாநிலங்களில் உள்ள இலக்கியச் சூழலைப்போல் தமிழ்ச் சூழலில் இணக்கம் இல்லாதற்குக் காரணம் என்ன? ஓர் இலக்கியவாதிக்கும் மற்ற இலக்கியவாதிக்கும் இடையிலான இடைவெளி அதிகமாக இருக் கிறதே!**

பல காலமாக அது அப்படித்தான் இருக்கிறது. மற்ற மொழி மாநிலங்களிலும் இது உண்டுதான் என்று நினைக்கிறேன். ஒரு மட்டம் வரை இலக்கியச் சண்டை சுவையாகத்தான் இருக்கிறது. மிகவும் கொச்சையான மொழியில் தெருச்சண்டை அளவுக்கு அது போகும்போது தான் தாங்க முடியவில்லை. இலக்கியவாதி என்று கூறிக்கொள்ளும் சிலருடன் இணக்கம் ஏற்படாமல் இடைவெளி இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது.

கேள்விகளும் புகைப்படமும் : குட்டிரேவதி

படிப்பகம்

www.padippakam.com

# கமலாதாஸ் கவிதைகள்



*கமலாதாஸின் கவிதைகள் கண்ணாடி முன்னின்று தனது உடலை வேறொரு பொருளாய் நோக்கும் பெண்ணின் மனத் திரையிலிருந்து விரிந்து கண் ணாடிக்குள் திறக்கும் அவளது உடலின் பல்வேறு அர்த்த உலகங்களையும் கால உணர்வுகளையும் தொடர்ந்து அதிர்வுகளாய் எழுப்பும் நுட்ப மான படிமங்கள்...*

படிப்பகம்

www.padippakam.com

## சொற்கள் பறவைகள்

சொற்கள் பறவைகள்தாம்
அந்தியிலிருந்து ஒளிந்து
தளர்ந்த சிறகுகளுடன்
எங்கு சென்று அவை கூடடைகின்றன?
அந்தி
என் சிரசில் பதிந்தது;
என் சருமத்தில் பதிந்தது.
தூங்குவதற்காகப் படுத்தபோது
அருள் தரும் விடியலைக்
காண்பேன் என்ற
உறுதி அற்றிருந்தேன்



## முன்பனிக் காலம்

இது ஒரு ரகசியம்.

ஒருமுறை
அவனுடைய சட்டையினூடாக
நான் அவன் மார்பைப் பார்த்தேன்;
ரோமங்களையும் தான்.

அன்று இரவில்
என் கனவில்
பனிக்காலக் காற்றுகள்
மரங்களிலிருந்து
இலைகளை மண்ணில் உதிர்த்தன.
நான் அவற்றில் படுத்தேன்;
புகைநெடி வீசும் இலைகள் மீதே
படுத்துக் கிடந்தேன்.

## காதல்

உன்னை நான் காணும்வரை
கவிதை எழுதினேன், ஓவியம் தீட்டினேன்;
தோழிகளுடன்
உலவி வந்தேன்.

இப்போது, நான் உன்னைக் காதலிக்கிறேன்.
என் வாழ்க்கை ஒரு நாயைப் போல
ஒடுங்கிச் சுருண்டு கிடக்கிறது
உன்னில் மனநிறைவைக் கண்டு.

## பரிசல்

உன் மெலிந்த உடல் ஒரு பரிசலாய்
அந்த இரைச்சலற்ற கரைக்கு
என்னைக் கொண்டு செல்லுமா?
பகல்வெளிச்சத்தில் மங்கலாகும்
ஒரு கிரகத்தைப்போல
அங்கு நான் விச்ராந்தியாகப் படுத்துக்கிடப்பேன்
தீர்க்கதரிசிகளின் கண்ணீரால்
என் ரத்தம் உப்பு கரிக்கிறது.
ஆனால் மலடியின் தொடைகளைப் பிளந்து
நாளையபொழுது வெளிவரவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

## தோற்கும் போர்

அவனுக்குள் இருக்கும்மிருகத்திற்கு
அவள் பெண்சிங்கமாக இருக்கவும்
வண்ணங்கள் நிறைந்த காமத்தை
        வெளிப்படுத்தவும் செய்தால்
எனது காதலால்
அவனைத் தடுத்துநிறுத்த
எப்படி முடியும்?

ஆண்கள் மலிவானவர்கள்
அவர்களைப் பொறியில் சிக்கவைக்க
மிகமிக மலிவான இரையைத்தான்
பயன்படுத்த வேண்டும்.
ஒருபோதும் நேசிக்கக்கூடாது
ஏனெனில்
ஒரு பெண்ணைப் பொறுத்தவரை
நேசம் என்பது
கண்ணீர்தான்;
ரத்தத்தின் நிசப்தம்தான்.

## வெற்றிடம் கொண்ட ஒரு பீப்பாய்

கண்களை மூடிக்கொண்டேனெனில்
நான் எதையும் பார்ப்பதில்லை.
காதுகளைப் பொத்திக்கொண்டால்
நான் எதையும் கேட்பதில்லை.
வெற்றிடத்தைத் தவிர வேறெதுவுமில்லை
உள்ளுக்கள் அல்லது வெளியே
சூனியம் குடிகொள்கிறது,
மனிதப் பீப்பாய்க்குள்
கொள்ளக்கூடிய
ஓரே பொருளான
வேதனையைப் போல.



## மாடப்புறாக்கள்

ஒரு பிற்பகல் கனவின்
படிக்கட்டுகளில்
அமைதி காத்தவாறு
மாடப்புறாக்கள் அமர்ந்திருக்கின்றன.

நண்பகல் வெயிலில்
கருகிய அலகுகளில்
தூசு படிகிறது.
ஜுரம் பாதித்த தெருக்களில்
தூசு படிகிறது.

சூரியக்கோளம் உப்பிப் பெரிதாகிறது.
பழுக்கத் தொடங்கிய
ஓர் இனிப்புக் கனியைப்போல
என் பிற்பகல் கனவின்
நெடுகிலும்
வெள்ளி இழைகள் பாய்ச்சப்படுகின்றன.

## கிருஷ்ணன்

உன்னுடைய உடல்
என்னுடைய சிறை,
கிருஷ்ணா!
அதற்கு அப்பால் எதையும் பார்க்க
என்னால் முடியவில்லை
உன் கறுப்புநிறம்
என்னைக் குருடியாக்குகிறது.
காதல் தோய்ந்த உன் வார்த்தைகள்
அறிவார்ந்த உலகின்
ஆரவாரத்தை வெளிதள்ளிக்
சாத்திக் கொள்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

## அழியும் காதல்

அழியாத காதல்
சிரஞ்சீவிகளுக்கு மட்டுமே.
சல்லாபக் கடவுளர்கள்
அவர்களின் ரகசிய சொர்க்கங்களில்
குலவுகிறார்கள்;
அவர்கள் களைப்பு அறியாதவர்கள்.
பேரின்பத்தைத் துய்க்க இயலாதபடி
மிகவும் குறுகியதாக இருக்கிறது,
இந்த வாழ்க்கை.

நிரந்தரம் எய்த முடியாதவண்ணம்
அந்தோ! மிக நெடியதாகவும்.

## ராதை

அந்த நீண்ட காத்திருப்பு
அவர்களுடைய உறவை
மிகவும் புனிதமானதாக ஆக்கிற்று.
எல்லாச் சந்தேகங்களும் பகுத்தறிதல்களும்
விடைபெற்றுக்கொண்டன.

ஆகவே,
அவனுடைய முதல் அரவணைப்பில்
அவள் ஒரு பெண்ணானாள்.
கடைசியில் கண்ணீர் உகுக்கும்
கன்னியுமானாள்.

என்னுள் இருப்பதெல்லாம் உருகியது,
என்னுள்ளத்தின் கடினம் கூட.
ஓ, கிருஷ்ணா!
நான் உருகி உருகி வழிகிறேன்
நீயன்றி
என்னிடம் எதுவும் எஞ்சவில்லை.



## அழகு, ஒரு குறுகிய பருவகாலம்

இன்பம்
ஆம்,
ஓரிரு நிமிடங்களாகவே இருந்தது.

அழகு
ஒரு குறுகிய பருவகாலம்

எந்த அறியாத காரணத்தால்
வறண்ட நாவல்மரங்களைப் போல்
நாம் அந்தக் காய்க்கும் காலத்தைக்
கடந்து வாழ்வது?

## வேண்டுகோள்

நான் இறந்தால்
என் தசையையும் எலும்புகளையும்
தூக்கி எறிந்துவிடாதீர்கள்!
அவற்றைக் குவித்து வையுங்கள்.
அவற்றின் வாடை சொல்லட்டும்
இந்தப் பூமியில் வாழ்வுக்கு என்ன மதிப்பு
இருந்தது என்பதை.
நேசத்துக்கு இறுதியில் என்ன மதிப்பு இருந்தது
என்பதை.

தமிழில் : வேணுமாதவன்
ஓவியம் : கமலாதாஸ்

படிப்பகம்

www.padippakam.com



# 'பச்சை தேவதை' – சல்மா கவிதைகள்

## அ.வெண்ணிலா

'பச்சை தேவதை' - சல்மாவின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. 'ஒரு மாலையும் இன்னொரு மாலையும்' என்னும் தன் முதல் தொகுப்பு மூலம் கவிதையுலகில் தன் வருகையைப் பதித்தவர் சல்மா.

தொகுப்பு முழுவதும் படித்து முடிக்கையில் சில உணர்வுகள் ஆழமாய்ப் பதித்து வைக்கப் பட்டிருப்பது புலப்படுகிறது. பாதுகாப்பும் நம்பிக்கையும் அற்ற வாழ்வு, மனத்தளவில் இணக்கமும் நெருக்கமுமற்ற உறவு, வாழ்வின் மீதான திருப்தியின்மை, நாட்களின் நிறைவின்மை என அநேக இன்மைகள் வெளிப்படுகின்றன. சல்மா கூறுவது போல் இவ்வாழ்வின் மீதான கலைந்து கலைந்து தெளிகிற ஆழமான பிரியங்களே வருத்தங்களாய் எஞ்சி இக்கவிதைகளில் ஆழமாய் ஒலிக்கின்றன.

விநாடிகளில் விரியும் வியப்பும் ஆச்சர்யமும் கவிதை கைக்கொண்டுவிடும் காலப்படங்கள். சல்மா அதிகமாக ஆச்சர்யங்களுக்கு உள்ளாகியிருக்கவில்லை. 'யாருடைய கரு இதுவென்றும், கருவின் பாதுகாப்பற்று ஓட்டு விளிம்பில் சரிந்து விளையாடும் குரங்கின் சலனமற்ற நிலையும்', 'தோட்டத்து விருட்சத்தில் காய்த்துக் கிடக்கும் வௌவாலுக்கு, எல்லா நிலையிலும் தான் தலைகீழாய்த் தெரிவோம்' போன்ற ஒன்றிரண்டு ஆச்சர்யங்களை மட்டும் கடக்கிறார்.

இரவு பற்றிய படிமங்களில் இருந்தே சல்மாவின் பெரும்பான்மைக் கவிதைகள் உயிர்த்தெழுகின்றன. இரவைத் தொட்டே சல்மாவால் கவிதை எழுத முடிகிறது.

''பகல் விலகிச் சென்ற மரத்தில் நெருங்கி வரும் இரவில் குஞ்சுகளின் அரவத்துடன் விழித்திருக்கும் கூடு, இரவின் அகாலத்தினைத் தன் பாட்டுக்குக் கடக்கும் குடுகுடுப்பைக்காரனின் குரல், உறங்கிவிட்ட தொட்டிச்செடிகளின் தூங்காத தளிரை வேண்டி அமர்ந்திருக்கும் இரவு, ஒற்றைச் சொல்லில் பற்றி அடர்கிற தீயில் கனலும் மின்சாரம் நீங்கிய இரவின் ஈரமற்ற கணம், வேண்டாத புணர்ச்சியின் துர்வாடையை ஞாபகப் படுத்தும் குருதி வாடை படிந்த இரவு, நகரை விழுங்கும் இரவு, இருளில் இருப்பதென்பது வெறுமனே இருளோடிருப்பதாய் மட்டுமல்ல என யோசிக்க வைக்கும் இரவு' - எனக் கவிதைகள் இரவிலிருந்தே துலங்குகின்றன.

தன் வாழ்வோடு பொருந்திப்போக முடியாத அவஸ்தையொன்று முள்ளாய்ச் சதா துருத்திக்கொண்டிருக்கின்றது சல்மாவின் கவிதைகளில். அன்றாடப் பணிகளின் ஓட்டங்களுக்கிடையிலும், மனதில் 'இது எனது இடமென்கிற பிடிமானமும், ஆதிகாலக் குகை வெளியிலிருந்தென் வெளியேற்றமும் இன்னும் கூட நிகழவில்லை என்ற வருத்தமும், விசேஷம் முடிந்த நாளொன்றின் பிற்பாதியில், எதிர்ப்பு காட்டாமல் மரஅலமாரிக்குள் முடங்கி உறையத் துவங்கும் நேற்றைக்கு மட்டும் நடமாடித் திரிந்த பளிங்கு பீங்கான்களும் என் ஓயாத பேச்சும்'' என்கிற வேதனையும் வழிந்தோடுகிறது.

''சலனமற்றுத் தேங்கிய நீர் பத்திரமாய்ப் பாதுகாக்கும் ஏதொன்றும் தொலைந்து போகாமல்' என ஏரி குறித்து யோசிக்கும் சல்மா, மனசிற்கும் அந்த வரையறையைப் பொருத்திக் கொள்ளலாம். நீங்காத காயங்களையும் நிலை பெற்ற தழும்புகளையும் மனசிற்குள் போட்டு வைத்து என்ன செய்ய? இரண்டொரு கவிதைகளும் ஒரு துளிக் கண்ணீரும் வரவாகலாம்.

'என் பூர்வீக வீடென்று' இரு கவிதைகள் உள்ளன. பால்யத்தின் விளையாட்டுத் தடயங்களைத் தன் மச்சு அறைச் சுவரொன்றில் காத்துக் கொண்டிருக்கும் சுவர்களும், 'ஏராளமான ரகசியங்கள் தாங்கி சரிந்துபோன கழிப்பறையுமாக' பூர்வீக வீடு ஒன்று.

'தன்னுயிர் ஒடுங்கியிருந்த கர்ப்பச் சதைத் துண்டை' இரண்டாவது பூர்வீக வீடாக்குகிறார். கழிப்பறையில் உருவாகித் தகிக்கும் வெப்பமெனவும், அதன் முன்னிட்டே பல வேட்டையாடலுக்கு உள்ளானாலும் கர்ப்பப்பையை இழக்கையில் தன்னை அரைமனுஷியாய் நினைத்துக்கொள்ளும் பெண்மனசு' என இரண்டாவது வீடு விவரிக்கப்படுகிறது.

இரண்டு வீடுகளைப் பற்றிய புரிதலை எடுத்துக் கொள்வோம். முதலில் இரண்டு வீடுகளின் சுதந்திரம் என்பதும் பெண் சார்ந்ததல்ல. வீடு பெண்களுக்கான இடம் என்றாலும், நடவடிக்கைகள் ஆண் சார்ந்தவை. கவிஞரே ஒத்துக்கொள்வதைப் போல, 'நான் பறந்து கொண்டிருந்திருக்கிறேன் தடுப்பரண்களுடனான வனத்தில்' - கட்டுப்பட்ட வாழ்வே சாத்தியம். இரண்டாவது வீடும் இவ்விதமே. பெண்ணின்

படிப்பகம்

www.padippakam.com


கருப்பை அவளுக்குச் சொந்த மன்று. நிரப்புவதும், காலி யாக்குவதும் ஆணின் பணி தான். அதில் நிறைந்திருந் தோம் என்பதில் சந்தோஷ மிக்க விசேஷமான காரணிகள் ஏதுமற்று, காரியத்திற்குட் பட்ட காரணமாக எடுத்துக் கொள்ள முடியும்.

புரிதலற்ற, கட்டுப்பாடு கள் நிறைந்த வீட்டை 'பூர்வீக வீடென்று' பரவசம் நிறைக்கக் கொண்டாட முடிகிறது. இதே குறைபாடுகளுடன் வாழ அமைந்துவிட்ட பிறிதொரு வீடு, 'பெரும் பாதுகாப் பின்மையையும்' 'வளமாக மாறாத ஏக்கத்தையும்' ஏன் உருவாக்க வேண்டும்? பெற் றோரின் கட்டுப்பாடுகளை யும் கணவனின் கட்டுப்பாடுகளையும் ஒரே தளத்தில் வைக்காமல் சலுகை காட்டுவதன் மூலம், துயரத்தின் ஒரு தட்டை லேசாக்கிக் கொண்டு, இன்னொரு தட்டைக் கூடுதல் கனமாக்கிக் கொண்டு மூச்சு திணறுகிறோமோ? குடும்ப உறவுகள் பற்றிய புரிதலை இன்னும் வளர்த் தெடுக்க வேண்டி உள்ளது

பெண்ணின் உடலியல் வேதனைகளை 'இயற்கை' என ஏற்றுக்கொள்ள முயன்றாலும், உண்டாகும் சங்கடங்களையும், கூச்சங்களையும் எத்தனை முயன்றும் போக்க முடிவதில்லை. 'அதிர்வு' கவிதை அப்படியொரு அவஸ்தைக் குள்ளாகியிருக்கிறது. 'குப்பை சுமக்கும் சிறுவன், ரத்தம் தோய்ந்த நாப்கின்களைக் கண்டு என்ன நினைத்துக்கொள்கிறானோ என நடுங்கிக் கூசுதல்' பெண்களுக்கே வாய்க்கும் பயம். கூச்சப்படும் பையன்களும் உண்டு, கிளர்ச்சியுறும் பையன் களும் உண்டு என மேலும் யோசித்தால் பெண்ணின் உடல் குறித்துப் பெரும் அச்சமேற் படும்.

ரசனை நிரம்பிய கவிதை 'நீர்க்குமிழி'

'பருவம் தப்பிய மழைக்கும்
மண் விடுவிக்கிறது தன் வாசத்தை
....
....
எனக்குத் தெரியவேயில்லை
மழைநாளின் முந்தைய ஞாபகங்களை
எவ்விதம்
மண்ணென நினைவூட்டிக்




கொள்வதென'

மழையில் மண்ணென
நம்மால் இருக்க முடியுமா?
மண்ணுக்கும் மரத்திற்குமே
சாத்தியம்.

''பாலிதீன் பையென
அலைவுறுகிறது மனம்''

''என்னை
வீழ்த்திக்கொண்டிருப்பது
உன் வலிமையில்லை
உன் பயங்கள்''

''அதீத நெருக்கத்தில் உலரும்
நமது வசீகரங்கள்''

போன்ற வரிகள் மீண்டும் வாசிக்கத் தூண்டுகின்றன.

தொகுப்பு முழுமை யும் படித்து முடிக்கையில் தீர்ந்து போகாத மனச் சோர்வே உண்டாகிறது. வாசகன் உள்நுழையத் தேவையில்லாத கவிஞரின் அகவுலக விவரிப்பையே எத்தனை விதத்தில் படிப்பது? சல்மா விரும்புவதுபோல் அல்லாமல் வாழ்வு குறித்த சங்கடங்களிலேயே கவிதை நின்று போகிறது. கையாண்டுள்ள சிறப்பான உத்திகளை உதிர்த்துவிட்டால் எல்லாம் ஒன்று போலவே தோன்றும். பூக்களால் அலங்கரிப்பதுபோல் கொஞ்சமும், முகத்திலறைகிறாற்போல் கொஞ்சமுமாய்க் கவிதைகள்.

தமிழ்க் கவிதை உலகம் சிறப்பு / சிறப் பல்ல என இருநிலைகளையே உருவாக்கி வைத்துள்ளது. கவிதைகளின் தர மதிப்பீடுகளை விட கவிதை குறித்த விரிவான விவாதங்களும் பகிர்தல்களும் கவிதைப் புரிதலை ஆழப் படுத்தும்.

தன் கவிதைகளில் 'சிறப்பானவை' என பேசப்படும் கவிதைகளை மீண்டும் மீண்டும் எழுத படைப்பாளி முற்படுவது, விபத்தாக முடியும். அந்த விபத்தில் 'சல்மா' சிக்கிக் கொள்ளக் கூடாது. தன் கைவசம் கிடைத்துள்ள கவிதைமொழிக்குப் பரந்துபட்ட அனுபவங் களைக் கொடுப்பாரானால் கவிதை இன்னும் பல தளங்களைத் தொடும்.

(பச்சை தேவதை; சல்மா; உயிர்மை பதிப்பகம், 29, சுப்பிரமணியம் தெரு, அபிராம புரம், சென்னை - 600 018; பக்கங்கள் - 102; விலை ரூ. 50/-)

படிப்பகம்

www.padippakam.com

எத்தனை மகிழ்ச்சியாய் இருந்தன அந்த
நாட்கள்
பூக்களை மகிழ்வித்த நம்புன்னகையின்
வாசலெங்கும்
கொட்டிக் கவிழ்ந்தன மகிழ்ச்சியின் பூக்கள்
ஞாபகமிருக்கிறதா உனக்கு
சிட்டுக்குருவிகளின் முட்டைகளுக்குள் நாம்
உறங்கிய காலங்கள்
எப்படியிருக்கிறாய் இப்பொழுது?
பவித்ரமான நமது குதூகல தேசத்தில்
பூக்களைச் சினேகித்த காலத்தையும்
உன்னையும் தேடி
நினைவுபடுத்தல்களிடையே தொடர்கிறது
ஒரு நீண்ட பயணம்
நம் நகரத்தின் வாசலெங்கும் வரவேற்கிறது
ஒரு பூ
மரணப் பூ
இராணுவ தொப்பிகளின் அணிதலின்
போதெல்லாம்
மகிழ்ந்து மலர்ந்து விரிக்கிறது தனது
இதழ்களை
ஒரு கோப்பை எரிபொருளில் செத்து
மிதக்கின்றன
சமாதானங்களும் சில ஏக்கங்களும்
உயிரற்ற உனது பவித்ர கண்களில்
இன்னமும் மிச்சமிருக்கிறது
நம் பால்யகாலப் பரவசப் பாடல்கள்
நகரம் உதிர்த்த சாம்பலில்
புதைந்துகொண்டிருக்கிறது வாழ்க்கை
திரும்புதல் பற்றிய உத்தரவாதமின்றி
முற்றிலும் முடிந்துவிட்டபின்
எஞ்சியிருப்பது
அனாதிகால சூன்யம் மட்டுமே
எத்தனை அபத்தமானது இந்த யுத்தம்.

– செ.அல்போன்சா

அந்த முதல் மாலையில் எனைக்
கிறிய பொழுதுகளில்
விரிந்த உதடுகளிடை வெம்மையின் தாக்கம்
ஒன்றுமே எனதில்லாமல் காணிக்கையாக்கி
விட்ட பிறகுள்ள நான்
குழம்பிய ஜீவனுக்குள்
எழும்பிய தளிர்கள்
மாற்றி எழுத முடியா வாழ்க்கை
மாற்றவோ, அழிக்கவோ
வேண்டும் துணிச்சலின் சாயலேனும்

## தேர்ந்தெடுக்கப்பட்டவை

பிரத்யேகமாய் தேர்ந்தெடுக்கப்பட்ட
சில ஓவியங்கள், அதற்கென்று
சில நாட்கள்,
தேடுதலின் வேட்டைகளை
குறைப்பதற்காய்த் தென்படும், நாட்கள் அவை,
பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க
மறுத்திடும் நிஜத்தினைச்
சுடும் சூரியக்கதிர்கள்
சுக்கு நூறாய் உடைந்த ஓவியத்தை
இழக்க மறுக்கும் கனவுகள்

## காகித மலர்

சலித்துப் போன பார்வைகளும் பேச்சுகளும்
ஓர் இறுகிய முத்தத்தில் தளர்ந்து போயிற்று.
அரிதான தருணங்கள்
எளிதாகக் கடந்துவிட்டதை எண்ணி
எப்போதும் எதையோ புதிதாய்
எதிர்நோக்கியபடி இன்னொரு
தருணத்திற்காய்க் காத்திருக்கும்
உனது மனம் ஒரு காகித மலர்

– சுதாந்நா

படிப்பகம்

www.padippakam.com

பெண்ணுக்கு ஒரு மணம்,
இரண்டாம் மணமோ கண்டனத்துக்குரியது
இரண்டாம் புணர்ச்சியோ
கடவுளுக்கெதிரானது, தண்டனைக்குரியது
ஆயின்,
குழந்தைகளை மார்புடன் அணைத்த
தத்தம் மனைவியர் வீட்டிலுறங்க,
கோடரி தூக்கிய ஆடவ வீரர்
கடவுளின் பெயரால் ஆயுதம் ஆவர்.

மதத்தின் பெயரால் குறிகள் விறைக்கும்,
மதத்தின் பெயரால் தம் நிலை மறக்கும்,
மார்புடன் அணைந்த குழந்தைகள் எறிந்து
''வேற்று''ப் பெண்டிரைப் புணர்ந்து
தண்டிப்பர்.

நிகழ்காலச் சட்டங்கள் பழங்காலம்போலவே
எழுதியோருக்காக மௌனித்து ஓயும்.
கூடி அழவும் பயந்த பெண்கள்
கடவுளர் கோயிலில் விரதங்கள் காப்பர்.

ஆயுதம் ஏந்திய கடவுளாயின் என்?
அனைத்தும்துறந்த கடவுளாயின் என்?
அன்பைப் போதித்த கடவுளாயின் என்?
அனைவரின் பெயரிலும் ஆயுதங்கள் எழும்.

கடவுளின் பெயரால் மதங்கள்,
மதங்களின் பெயரால் ஆயுதங்கள்,
ஆயுதம் கையில் ஏந்திய மனிதர்,
மனிதரின் கையில் காவலுள் கடவுள்?

வாழிய கடவுளர், வளர்க மதங்கள்
மதங்களைக் காக்க, இனங்களைக் காக்க,
மனிதரைப் படைக்கும் பாவத்தைப்
புரிவதால்...
அழிந்தொழிக பெண்கள்!

(இன மத இன்னோரன்ன காரணங்களுக்காகப்
பாலியல் பழி தீர்க்கப்பட்ட
உலக சகோரிகளுக்காக)

– கமலா வாசுகி

## ஆயிரம் பெண்களுக்கு 2005ம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு

முதல் முறையாக 1901ல் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதுவரை பெரும்பாலும் ஆண்களுக்கும் நிறுவனங்களுக்குமே அளிக்கப்பட்டது. 11 முறைகள்தான் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டது. சமாதானத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலிருந்து எப்பொழுதுமே பெண்கள் விலக்கப்பட்டு வந்திருக்கின்றனர். உண்மையில் சமாதானத்திற்கான பெண்களின் பங்கு உலகளாவியது. 20051 1905ல் முதன்முதலாக ஒரு பெண்ணுக்கு - Bertha von Suttner க்கு வழங்கப்பட்டு நூறு ஆண்டுகளுக்குப்பின் 2005-ல் இந்த சமாதானத்திற்கான நோபல் பரிசை அன்றாடம் அமைதிக்கான பெண்களின் உழைப்பின் பலனாக 1000 பெண்கள் இந்த நோபல் பரிசைப் பெற விரும்புகிறோம். எந்தப் பின்புலத்திலிருந்தும் வந்த, அமைதிக்காக உழைத்த பெண்களை இந்த விருதுக்காக நீங்கள் முன்மொழியலாம். விருதுபெறும் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சிறப்பான அளவில் ஆய்வாளர்களாலும், செய்தியாளர்களாலும், திரைப்பட இயக்குநர்களாலும் எழுத்தாளர்களாலும் புகைப்படக்கலைஞர்களாலும் முழுமையாகப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவார்கள். உலகளாவிய கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்படும். இதற்கான மற்ற விவரங்களுக்கு www.1000peacewomen.org என்ற இணையதளத்தில் பிரவேசிக்கவும்.


பனிக்குடம்
கவிதையும்
அது கிளர்த்தும்
உரையாடலும்
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

மார்ச் - ஏப்ரல் 2004

காலம் : 1
பருவம் : 3

ஆசிரியர் : குட்டிரேவதி

ஒளி அச்சு : மதர் போர்டு

முகப்பு வடிவமைப்பு : ட்ரீம்ஷாப்

பதிப்பாளர் : வி.மோகன்தாஸ்

வெளியீடு : குல்
23, அகத்திமுத்தன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 94441 43978
panikkudam@rediffmail.com

ஆண்டுச் சந்தா : ரூ. 50
இரண்டாண்டுச் சந்தா : ரூ. 100
ஆயுள் சந்தா : ரூ. 1000
ஆயுள் சந்தா (வெளிநாடு) : US $100

அட்டை ஓவியம் : கமலாதாஸ்


படிப்பகம்

www.padippakam.com



# இருதயப் பரிவர்த்தனையிலிருந்து கவிதையின் கட்டுமானம் வரை

குட்டிரேவதி

பல சமயங்களில் நான் உணர்வதுண்டு. 'பெண்ணியச் சிந்தனை' ஒரு போராட்டத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துவிட்ட ஒரு பெண்ணின் உண்மையான போராட்டம் அதற்குப் பின் ஓய்ந்துவிடுவதே இல்லை. தொடர்ச்சியான ரணகளத்தை அவள் சந்திக்க வேண்டியிருக்கிறது. இரவும் பகலும் அனவரதமும் ஆண் இயங்கும் வெளியிலும் இல்லாத கணத்திலும், பெண்களுக்கு மத்தியிலும் பெண்கள் குறித்த அவதானிப்பிலும் அவள் விடாமல் ஓர் அரூபச் சிந்தனையோடு, அதை முற்றிலும் மெய்மையாக்கப் போராடிக்கொண்டேயிருக்கிறாள். இதையே கமலா சுரையாவைச் சந்திக்கும் போதும் உணரநேர்ந்தது. இந்த நீண்ட, ஓயாத சிந்தனைப் போராட்டத்தினால் அவருக்குள் அவர் விருத்தி செய்துகொண்ட வல்லமை எல்லோருக்கும் பகிரங்கமாகப் பரிமாறப்படுகிறது. பெண்ணின் 'சிந்தனை அடையாளங்கள்' மறுக்கப்படும் விதம் இன்னும் புலனாகாதது.

முதல் விசயமாக, பெண்களுக்கு நிகழ்பானுபவங்கள் முற்றிலுமாக மறுக்கப்படுகின்றன. பிரயாணங்களோ, சம்பவங்களோ, கூட்டங்களோ, உரையாடல்களோ, சந்திப்புகளோ நிகழ்ந்துவிடாத ஒரு சூன்யமான வெளியில் பெண்களைத் தள்ளிவிட்டபின் அவர்களுக்கு உலகத்துடனான தொடர்பு வெறும் லோகாயதமானதுதான். இதைதான் கமலா சுரையா விடாது மறுத்துக்கொண்டேயிருந்திருக்கிறார். எல்லா பெண்ணியவாதிகளும். ஓய்வின்மையை உணரும் பெண்ணியவாதிகளைத் தொடர்ந்து சந்தித்துக்கொண்டேயிருக்கிறேன். அவர்கள் தீவிரமாகத் தங்கள் சிந்தனை அழைத்துச் செல்லும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கின்றனர், வேறெந்த விமர்சனத்தையும் பொருட்படுத்தாது.



ஓவியம் : பெனிட்டா பெர்ஷியாள்

கமலா சுரையா, 'ஆண்கள் தந்திரசாலிகளாகவும் சந்தர்ப்பவாதிகளாகவும் இருக்கின்றனர்; பெண்களோ திறந்த புத்தகங்களாக இருக்கின்றனர்' என்கிறார். பெண்களின் பால்தன்மையை நிலைப்படுத்திக் கொள்வதற்கான கூறுகளையெல்லாம் ஆண்கள் அபகரித்துக் கொண்டேயிருக்கும் சூழ்நிலையில் 'சிந்தனைச் சமநிலை'யை ஊக்குவிப்பது பெண்களின் பால்தன்மைதான். சமூகத்தின் ஒவ்வொரு சொல்லும் அசைவும் சாயலும் ஆணாதிக்கம் மிகுந்த வெளிப்பாட்டைக் கொண்டிருக்கும் போது பெண்ணியச் சிந்தனையை விவாதத்திற்

படிப்பகம்

www.padippakam.com

கெழுப்புதல் என்பதும் சாதாரண விஷய மில்லை. மதம், தனது பங்கிற்கு நிறைய பெண்ணடிமை அணிகலன்களைக் கொண்டு தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெண்ணியவாதியும் தனது கூர்மையான சிந்தனையின் வழியே ஆணாதிக்க அடித்தளத் தின் ஆணிவேரை அசைக்க முயல்கின்றனர். கமலாதாஸ் தனது 'The looking glass' கவிதையில் இதற்கான பெண்ணிய - ஆணாதிக்க நிலைப் பாடுகளைத் தெளிவாக, நுட்பமாக உணர்த்தும் அனைத்து தன்மைகளையும் குளியலறைச் சூழலையும் இருவரின் நிர்வாணமும் உணர்த் தும் பேதங்கள் நிறைந்த பால்தன்மைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

பெண் கவிஞர்கள் சமூக அக்கறை சார்ந்த கவிதைகளை எழுதவேண்டுமெனப் பணிக்கப் படுகின்றனர். உடலின் அரசியல் எழுப்பிவிட்ட எல்லா அரசியல் விவாதங்களையும் மீண்டும் மீண்டும் தீர்வுகாணவேண்டுமென்பது தோல் புண்ணிற்கு மருந்திடுவதுதான். நல்ல சமூகம், ஒருபொழுதும் பெண்ணின் உடலைப் பண் பாட்டு வியாபாரத்திற்கு நுகர்பொருளாக்காது. பெண் இனம், சமீபிக்கும் எதிர்காலத்தில் மனநோயாளிகளாகவும் தற்கொலை செய்து கொள்பவர்களாகவும் மாறுவதற்கான எல்லா அடிப்படையான கூறுகளையும் தமிழ்ச் சமூகம் கொண்டுள்ளது. எவ்வளவோ இயக்கங்கள் தோன்றி மறைந்துகொண்டிருக்கும் பட்சத்தில் பெண்ணிய நிலைப்பாட்டை உள்வாங்கிக் கொள்ளாத எந்த இயக்கமும் ஆணாதிக்கத்தை ஊடகமயமாக்கும் வெறும் மொண்ணையான இயக்கம்தான். அரசியல் பலம் என்பது சிந்தனை பலம். சிந்தனை பலம் என்பது அதிகாரம் சார்ந்து இயங்காதது.

பெண்குரலின் கழுத்து இறுக்கப்படு வதன் சுலபமான வழி அவளது உடலை அருவருப்பாகவும், மதிப்பீடுகள் அற்றதாக வும்... அவளையே நோக்கச் செய்வதுதான். இன்னொருவரின் உடமையாக்கப்பட்ட உடலின் கண்கள் திறக்கவே இயலாதபடிக்கு 'குருட்டுச்சாத்திரங்கள்' நிறைய புகட்டப் பட்டிருக்கின்றன. உலகின் எல்லா வகையான சமுதாயக்கரிசனங்களுக்கும் யுத்தங்கள் ஓய்ந்து போதலுக்கும் ஒரே தீர்வு பெண்ணின் உடல்மீது செலுத்தப்படும் ஆணின் அதிகாரம் களையப் படுவதுதான். இதற்கிடையில் எந்த அவர் களுடைய சமுதாய அக்கறைகளும் போலி யானவை என உறுதியாகக் கூறுவேன். 'உங்கள் உடலைப்பற்றி எழுதிய ஆபாசங்கள் போதும். சமுதாய அக்கறைக்கவிதைகள் எழுத வாருங்கள்' என அழைக்கிறார்கள். வேடிக்கையானது. பசுமைப்புரட்சி, சாதியம், யுத்தம், தண்ணீர் அரசியல், வறுமை இவை எதுவுமே பெண் ணினத்துக்கு இழைத்த தீங்குகளை மறைக்கச் சொல்கிறீர்கள். எல்லாவற்றிற்கும் இடையில் நசுங்கிப்போவது பெண்ணின் உடல்தான் என்பதைப் பல சமயங்களில் பெண்இனம் கூட அறிவதில்லை.

பெண்ணின் அழகு என்ற கருவி கவிதை யிலும் போராட்டத்துக்கான தேவையிலும் ஆணின் வாழ்வியலிலும் மையமானது. ஏனெனில் அது ஆணின் நோக்கத்திற்கேற்றாற் போல் இதுதான் 'அழகு' எனக் காலத்திற்கேற்ப மாற்றி வரையறுக்கப்படுகிறது. அந்த இலக்கை நோக்கியே பெண் தனது சிந்தனையையும் எண்ணத்தையும் உடலையும் நகர்த்திக் கொண்டே போகவேண்டும். அப்பொழுது ஆண்களின் அதிகாரப் பிரயோகத்திற்குச் சாதக மான 'கண்ணால் நுகரும் இன்பக்காட்சி'யி லிருந்து தொடங்கி 'உனது உடல் எனது சொத்து' வரை செல்கிறது. வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதோ ஒரு பெண் குழுமம் இந்த ஒடுக்குமுறையை எதிர்த்து எழுந்து கொண்டேதான் இருந்திருக்கிறது. அதில் குறைந்த அளவு வெற்றியும் கண்டிருக்கிறது.

பெண் தன் விடுதலையுணர்வைக் கண்டடைவது அவ்வளவு எளிமையானது அன்று. ஆணின் அதிகாரம் கிளைத்துக்கிடக்கும் பெண்வெளிகளையெல்லாம் கண்டறிந்து முறிக்கவேண்டும். இது மிகவும் நுட்பமான பயிற்சி. பெண் தனது அன்றாட நடவடிக்கை களை எதிர்நின்று காணுவதும், அதேசமயம் அப்பொழுது எழும்பும் சந்தேகங்கள் கிளப்பும் போராட்டத்தில் ஈடுபடுவதும் ஒப்புக் கொடுப்பதும்தாம். ஆனால் இது அவ்வளவு எளிமையானதும் அன்று. அடிமைத்தனத்தின் ஒரு கண்ணிமுனை புரிந்துவிட்டால்போதும். அது முழுமையும் பெண்ணை உளைவுற்றவளாக ஆக்கிவிடுகிறது. பின் நீங்கள் தொடங்கிய இடத்தைத் திரும்பிப் பார்க்கவே இயலாத படிக்கு ஒரு சுதந்திர வெளியை நோக்கி ஓடத் தொடங்கிவிட்டீர்கள் என்பதுதான் பொருள்.

படிப்பகம்

www.padippakam.com


புகைப்படம்: கே.சி.ஜார்ஜ்

# 'எனக்குள் கவிதை செத்துவிட்டது'

– கமலாதாஸ்

கமலாதாஸ், தனது வாழ்க்கையின் முதிர்ந்த காலகட்டத்தில் கமலா சுரையாகவாக மாறிவிட்டவர். நீண்டகாலமாகக் காத்திருந்து, ஒருநாள் அதிகாலையில் மிகப்பெரிய பந்தினைப்போல் திரண்டிருந்த சூரியனை அதற்கான ஆமோதிப்பாக ஏற்றுக்கொண்ட வர். தனது வாழ்க்கையைத் தானே சுவாரசியப் படுத்திக்கொள்வதில் கமலா சுரையாவை எவரும் மிஞ்சிவிட முடியாது என யாவரும் குற்றஞ்சாட்டினாலும் கமலா சுரையாவின் பெண்ணிய தாக்கங்கள் இதற்கான நியாயங்களை எழுப்புகின்றன.

***நீங்கள் எப்பொழுதுமே உங்களுடைய உணர்வுகளை, கவிதை, சிறுகதை, ஓவியம் என வேறுபட்ட ஊடகங்கள் வழியாக வெளிப் படுத்திக்கொண்டேயிருந்திருக்கிறீர்கள். ஒரு பெண் சமூகத்தில் ஏற்கும் மனைவி, அம்மா, காதலி என்ற வேறுபட்ட கதாபாத்திரங்களைப் போல், இதையும் ஒரு பெண்ணின் வேறுபட்ட முகங்கள் என வகைப்படுத்தலாமா?***

ஒரு மனிதனைத் தனியாக இப்படி வகைப் படுத்துவதென்பது மிகவும் கடினமான காரியமென்று நினைக்கிறேன். ஒரு பெண் என்பவள், அவளது அனுபவங்களின் ஒட்டுமொத்த தொகுப்பு. ஓவியம், கவிதை, நாவல் என எல்லாவற்றிலும் நான் பரிசோதனை முயற்சிகளைச் செய்துகொண்டேயிருந்தேன். நான் பத்திரிகைகளில் பத்தி எழுதுபவளும் கூட. ஒரு கவிஞராக இருப்பது சிரமமான விஷயம் என்பதால்தான் நான் தொழில்முறை எழுத்தாளராகிவிட்டேன் என நினைக்கிறேன். ஏனெனில் இந்த நாட்டில் கவிதைகளை விற்பனை செய்ய முடியவில்லை. வாழ்வின் தேவைக்காகவே பத்திரிகையில் பத்திகள் எழுதவேண்டியிருந்தது. இது ஒரு கடினமான வாழ்க்கையாகவே இருந்திருக்கிறது. இதுதான் எனது வாழ்க்கையை முழுவேகத்தில் இயங்க தயாராக்கியது. இது குறித்து எனக்கு எந்த வருத்தமும் இல்லை. சிலர், நான் ஏதேனும் ஓர் ஊடகத்தில் மட்டுமே கவனம் செலுத்தியிருக்கவேண்டும் என நினைக்கிறார்கள்.

***நீங்கள் அப்படி நினைக்கவில்லையா?***

நான் அப்படி நினைக்கவில்லை. அது எனக்கு மிகவும் சலிப்பூட்டியிருக்கும். என்னால் எவ்வளவு சமாளிக்க இயலுமோ அவ்வளவு அனுபவங்களால் நான் எனது வாழ்க்கையை நிரப்ப விரும்பினேன். ஏனெனில், இன்னும் ஒரு பிறவி உண்டு என்பதை நான் நம்பவில்லை. ஓர் ஓவியராக, கவிஞராக, நல்ல தோழியாக, அம்மாவாக இருப்பதென எல்லாவற்றையும் நான் அனுபவிக்க விரும்புகிறேன்.

***உங்களுடைய சிறுகதைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன கவிதைகள். உங்களுடைய ஓவியங்கள் உங்கள் பத்திகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. சிலசமயங்களில், ஒரே நபரால் படைக்கப் பட்டவை அல்ல என்று உணரும்படியாக இருக்கின்றன. ஓவியர், பத்தி எழுதுபவர், கவிஞர் எல்லோரும் வேறுபட்டவர்கள் என்று நினைக்கிறீர்களா?***

பத்தி எழுதுவதற்கு, முதலில் ஓர் எழுத்தாளர் என்ற நன்மதிப்பை நான் பெற வேண்டியிருந்தது. ஏனெனில் எந்தச் செய்தித்

படிப்பகம்

www.padippakam.com

தாளும் அந்த எழுத்தாளரின் தகுதியை அறியாமல், தனது செய்தித்தாளில் அவருக்கு இடம்தர முன்வருவதில்லை. அவர்களுக்கு உங்களின் திறன் மீது நம்பிக்கை ஏற்பட வேண்டும். பத்தி எழுத சில வருட முதிர்ச்சி தேவையாயிருக்கிறது. அது ஒரு தேர்தலுக்கு நிற்பதைப்போல என்று கருதுகிறேன். உங்களுக்குப் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கும், உங்களைப் பின்பற்றுவார்கள் என்ற உறுதியுடையவராக இருந்தால், நீங்கள் தேர்த லுக்கு நிற்கலாம்.

உங்களுக்குப் பரந்த அளவில் வாசகர்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் நம்பினால், ஒரு சமூகசேவகியாக இருக்கத் தொடங்குவதைப் போல நீங்கள் பத்தி எழுதவும் தொடங்கலாம். ஏனெனில் ஓர் எழுத்தாளர், அவரது வாசகர் களின், 'உன்னதமான வாசகர்களின்' சிந்தனைப் போக்கை மிகச் சிறப்பாகக் கையாள முடியும். இப்படித் தனது செல்வாக்கை ஓர் எழுத்தாளர் பயன்படுத்திக்கொள்வது எல்லா நேரங்களிலும் மோசமான விஷயமில்லை.

பார்த்திராத ஒரு வாசகருடன் நேரடியாக ஈடுபடாமலேயே அவருக்கு ஒருவிதமான ஆலோசனையை அளிக்கமுடியும். இப்படித் தான் எழுத்தாளர்கள் பின்பொரு காலத்தில் தங்களைச் சமூகசேவையிலும் அரசியலிலும் ஈடுபடுத்திக்கொள்ளத் தேவையான திறனைத் திரட்டிக்கொள்கிறார்கள். மிகவும் மோசமான வாழ்க்கை இது இல்லை என்றாலும் தொடக்கத் தில் நிறைய பிரச்சனைகள் இருந்தன.

***பிரச்சனைகள் என்றால் எந்த விதத்தில்...?***

எந்தவிதத்தில் என்றால், இந்தத் தொழி லுக்கு நான் சரியான பால்தன்மை சார்ந்தவ லல்லள். ஏனெனில், பெண்கள் தங்கள் சமய லறைச் சூழலோடு இறுக்கிக்கொள்ள வேண்டு மென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அது மீறிய எதுவும் சமூகத்தில் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வேறெதுவும் செய்ய முயற்சிக்கும் முன்னர் ஒரு பெண் முதலில் தன்னை ஒரு நல்ல மனைவியாகவும், அன்னை யாகவும் நிரூபிக்கும் கட்டாயமிருக்கிறது. அது நிறைய வருடங்களின் காத்திருப்பையும் வேண்டுகிறது. நரைக்கும் வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. எனக்குக் காத்திருக்க நேரம் இல்லை. நான் மிகவும் பொறுமையற்றவளாக இருந்தேன். ஆக, நான் எனது வாழ்க்கையின் தொடக்கத்திலேயே எழுதத் தொடங்கிவிட்டேன். மேலும், நான் அதிர்ஷ்டம்மிக்கவள். எனது குடும்ப வருமானத் திற்கு நானும் பங்களிக்கிறேன் என்பதால் கணவரும் பாராட்டினார். ஆக, இரவிலும் என்னை எழுத அனுமதித்தார். எல்லா வீட்டு வேலைகளும் முடிந்தபின், எனது குழந்தை களுக்கும் கணவருக்கும் உணவு பரிமாறிவிட்டு, சமயலறையைச் சுத்தம் செய்துவிட்டு விழித் திருந்து காலை வரை எழுத அனுமதிக்கப் பட்டேன். இது எனது ஆரோக்கியத்தை மிகவும் பாதித்தது.

***நீங்கள் தவறான பால்தன்மையுடன் பிறந்துவிட்டதாகக் கூறினார்கள். நீங்கள் ஆணாக இருந்திருந்தால் எழுத்தாளராக இருப்பது எளிதாக இருந்திருக்கும் என்று நினைக்கிறார்களா?***

ஆமாம், நிச்சயமாக. எனது மாமா நாலப்பாட் நாராயண மேனன் எல்லோரும் அறிந்த ஓர் எழுத்தாளராக இருந்தார். காலையி லிருந்து இரவு முடிய அவர் எழுதிக்கொண் டிருப்பதைக் கவனித்திருக்கிறேன். எழுதுவதைத் தவிர வேறெதையும் அவர் செய்யவேண்டிய தில்லை. அது ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை என்று நினைக்கிறேன்.

***உங்கள் அம்மாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர் எப்படி அவ்வளவு எழுத தன்னைச் செயற்படுத்தினார்?***

அம்மாவிற்கு நிறைய எழுதவும் முழுநேர எழுத்தாளராகவும் இருப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அது அவருக்கு எளிதாகவும் இருந்தது. எனது தந்தை பழைய பாரம்பரியம் சார்ந்தவராக இருந்தாலும் ஒரு நல்ல மனிதராக இருந்தார். குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள வும் சமையல்வேலைகளைக் கவனித்துக் கொள்ளவும் நிறைய பணியாட்களை ஏற்பாடு செய்திருந்தார். எழுதுவதைத் தவிர வேறு எதையுமே செய்யவேண்டியதில்லை. அவர் அந்த அனுபவத்தை நன்கு நுகர்ந்திருப்பார். தனது இளமைப்பருவத்திலேயே நிறைய நூல் களை எழுதினார்.

***உங்களுடைய எல்லா கடமைகளையும் நிறைவேற்றியவாறே, இரவின் எல்லா கண்ணி களிலிருந்தும் உங்களை விலக்கிக்கொள்ள முடிந்ததா?***

ஆம். நான் அதைச் செய்யவேண்டி யிருந்தது. நான் மிகவும் உணர்ச்சிவயப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டவளாக இருந்தேன். மரபுசார்ந்த முறைகளில் இல்லை என்றாலும் என்னுடைய குழந்தைகளோடும் கணவரோடும் மிகவும் இணக்கமாக இருந்தேன். ஆனால், அதை மறந்துவிட்டு, எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு, சமையல் மேடையில் எல்லா பாத்திரங்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு எழுத அமர்வதைப்போல எனக்கான ஒரு தளத்தை ஏற்படுத்திக்கொண்டு அதில் என்னால் நிறைய கதைகளையும் பத்திகளையும் கூட என்னுடைய ஜன்னலருகே அதிகாலையில் பால்காரன் வரும்வரை எழுத முடிந்தது.

**இரவிலும் கடினமாக உழைத்து, பகலிலும் உழைப்பது என்று இரு தனித்த அடையாளங்கள் உங்களுக்குக் களைப்பை ஏற்படுத்தவில்லையா?**

ஆமாம். மிகவும் களைப்பாக இருந்தது. அது என்னுடைய ஆரோக்கியத்தை மிகவும் பாதித்தது. ஆனால் சிறிது பாதிக்கப்பட்ட உடல் நிலை அதற்கான சலுகைகளையும் கொண்டிருந்தது. என்றாலும், ஒரு விளையாட்டு வீரரைப்போன்று வெளியேறி ஓடும் வாழ்க்கையை நீங்கள் ஏற்கமுடியாது. வீட்டுடன்தான் கட்டுண்டு இருக்கவேண்டும். வீட்டுடன் கட்டுண்டு இருந்தால், உங்கள் நேரத்தை எழுதித்தான் செலவழிக்கவேண்டும். நான் நிறைய எழுதினேன்.

ஒவ்வொரு வெற்றிபெறும் ஆணுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள். ஆனால், அவ்வாறே எதிரிடையாக உங்களுடைய வெற்றிகரமான எழுத்தாளருக்குப் பின்னும் ஓர் ஊக்குவிக்கும் துணையாக இருக்கும் கணவர் இருந்திருக்கிறார்.

**ஒரு பெண் எழுத்தாளர் வாழ்க்கையில் அப்படியான ஓர் ஆண் இருப்பது அவசியமென்று நினைக்கிறீர்களா?**

ஓரளவிற்கு; எனது கணவரும் பரிவுடன் நடந்துகொள்ளவில்லையென்றால், என்னால் ஓர் எழுத்தாளராக ஆகியிருக்க முடியாது. எழுத்தாளர்களாகவும் கலைஞராகவும் ஆக விரும்பிய பெண்களை எனக்குத் தெரியும். ஆனால் கணவன்மார்களின் குறுக்கீட்டால் அந்த முடிவை மாற்றிக்கொண்டார்கள். என்னுடைய முடிவு அப்படி திசைமாற்றப்படவில்லை. மாறாக வரவேற்கப்பட்டது. நான் எழுதுவதன் பெருமையில் அவரும் சிறிது ஏற்றுக்கொண்டது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.

**வருடங்கள் கழியக் கழிய, ஓர் இளம் மணப்பெண்ணிலிருந்து ஒரு மனைவியாகவும் அன்னையாகவும் உங்களது பரிமாணம் எப்படி நிகழ்ந்தது? எப்படி இந்தக் கடமைகள் அல்லது மாற்றங்கள் ஒரு மனிதராகவும், படைப்பாற்றலுடையவராகவும் வளர உதவுகிறது?**

வளர்ச்சி என்பது நிச்சயமாக மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. ஏனெனில், வாழ்க்கையில் நிறைய அவதாரங்கள் எடுக்கவேண்டும். நான் நிறைய அனுபவிக்க வேண்டியிருந்தது. நிறைய பார்க்கவேண்டியிருந்தது, நிறைய கேட்க வேண்டியிருந்தது. நான் ஓர் அவசர கதியிலும் இருந்தேன். இன்னொரு விஷயம், நமக்கு வயதாகிறது என்பதை நாம் அறிவோம். மற்றவர்கள், நமக்கு வயதாகிக்கொண்டிருக்கிறது என்பதையும் அறிவார்கள். ஆனால் நான் அப்படியல்ல. தனக்குள்ளே, ஒருவரும், வயதாகிவிட்டதாக உணர்வதில்லை; வயதற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். அது எப்பொழுமே வயதற்ற தன்மையுடன்தான் இருக்கும்.

**வாழ்க்கையில் நீங்கள் செய்யவேண்டியிருந்த கடமைகள், உங்கள் படைப்பாக்க எழுத்துக்கு உதவினவா?**

அது எனக்கு உதவியது. சில சமயங்களில் உணர்வுநிலையிலும், அமைதியான தன்மையிலும் வேறொரு கதாபாத்திரத்தையும் என்னால் புகுத்திக்கொள்ள முடியும். ஏனெனில், அப்படிப்பட்ட ஒரு மனிதனைப் பற்றி எழுத

படிப்பகம்

www.padippakam.com

விரும்பினேன். ஆக, அந்தக் கதாபாத்திரத்தைச் செயற்படுத்தினேன், அதைப்பற்றி ஒரு கதையாக எழுதும் முன்பு.

***எந்த மாதிரியான ஒரு நபரைப்போல ஆக நினைக்கிறார்கள்?***

பெரும்பாலும் அப்படியாகத்தான் இருந்தேன். அவரைப்போல யோசிப்பேன், அவரைப்போலவே நடிப்பேன். நீங்கள் என்னுடைய எந்தக் கதாபாத்திரம் மிக வலிமை யானது என்று கேட்டால் நான் என்னுடையது தான் என்று கூறுவேன். நான் என்னைப் பற்றி எழுதும்போது, நான் மிகவும் வலிமையான அம்சத்தை வெளிக்கொணர்ந்தேன். அந்த அம்சமானது வெகுவிரைவில் அழிந்துபோகாது.

***உங்களுடைய எல்லா படைப்புகளிலும் உங்களின் ஒரு பகுதி இருக்கிறதா?***

நிச்சயமாக. ஒரு படைப்பாளி தனது படைப்பில் தன்னுடைய ஒரு பகுதியை விட்டுச் செல்கிறான் என்று உறுதியாக நம்புகிறேன். நீங்கள் இதிலிருந்து தப்பிக்கவே முடியாது. நீங்கள் உங்கள் படைப்பின் கண்ணிகளுக் கிடையே சிக்குண்டு அங்கேயே இருக்கிறீர்கள். அதுதான் படைப்பின் மிகவும் உயிர்ப்பான பகுதி. ஆக, என்னுடைய கவிதைகளிலும் ஓவியங்களிலும் கதைகளிலும் என்னுடைய ஒரு பகுதி இருக்கத்தான் செய்கிறது.

***நீங்கள் வேறு யாராகவும் இருக்க விரும்பியிருக்கிறீர்களா? வேறேதேனும் செய்துகொண்டிருக்க விரும்பியிருக்கிறீர் களா?***

நான் அப்படி நினைத்திருக்கவேண்டும். இருபது வயதிலிருக்கும்போது, நான் ஒரு மருத்துவராக விரும்பினேன், முயற்சி செய்யவும் நினைத்தேன், பின், எழுத்தாளர் என்ற பாத்திரத்தை ஏற்றதும் அதிலேயே இருந்து விட்டேன்.

***நீங்கள் எப்பொழுது படைப்பாக்கப் பணியிலிருந்து முற்றிலும் வேறுபட்டு தொழில்துறை எழுத்தாளராக விரும்பினீர்கள்?***

எனது கணவருடைய வருமானத்தை மட்டும் வைத்துச் சமாளிப்பது சிரமமாக இருந்தது. எனவே, அவர் என்னுடைய கதை களை விற்கும்படிக் கூறினார். பிறகு நானும் குடும்ப வருமானத்திற்குப் பங்களிப்பவளாக ஆனேன். எனது கணவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபோது, கவிதை எழுதுவதைப் பற்றி நான் யோசிப்பதை நிறுத்த வேண்டுமென்று கூறினார். எப்படியும் கவிதைகள் விற்கப்போவதில்லை. விற்கும் விஷயங்களை நான் எழுதத் தொடங்க வேண்டும். சிறுகதைகளாக இருக்கலாம். அல்லது நீளக் கதைகளோ, பத்திகளோ. பத்தி களுக்குத்தான் அதிகம் பணம் தரப்படுகின்றது. ஆக, நான் கவிதை எழுதுவதை விட்டு விட்டேன். என்னுள் கவிதை செத்துவிட்டது. ஏனெனில் நான் நேரத்தை வீணடிக்கிறேன் என்ற குற்றவுணர்வின்றியும் அது என்னுடைய கணவ ருக்கு உதவப்போவதில்லை என்ற உணர் வோடும் என்னால் சிந்திக்க முடியாது.

***உங்களுக்கு அது வருத்தமாக இல்லையா?***

ஆமாம். அது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இப்பொழுதும் வருத்தமாகத்தான் இருக்கிறது. பெரும்பாலும், ஒவ்வொரு வருட மும், உலகின் வேறொரு கோடியிலிருக்கும் ஓரிடத்திற்கு நான் அழைக்கப்படுகிறேன். மேலும்நான் வெளிநாடு செல்லும்போது, நான் அங்கு ஒரு கவிஞராகத்தான் அறியப்படுகிறேன் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. பின் எனது கவிதையை இன்னும் செழுமைப் படுத்தவேண்டும் என்று நினைப்பேன். ஆனால் பொருளாதார வசதி மிகவும் பலவீனமாக இருந்தது.

***உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?***

ஆமாம். நிச்சயமாக.

***எந்த வடிவத்தில்?***

கடவுள் எனது உடலின் ஒவ்வொரு செல்லிலும் இருப்பதாக நம்புகிறேன். அவரது உலகத்தின் ஒவ்வொரு செல்லிலும் கூட. 'ஒருவிதமான ஆற்றல்'. அப்படித்தான் நான் கடவுளைப் பற்றிச் சிந்திக்கிறேன். அந்தக் கடவுளே எனக்குப் போதுமானது. கோயில் களிலும், தேவாலயங்களிலும் மசூதிகளிலும் சிறைப்படுத்தப்பட்ட கடவுளர்கள் எனக்குத் தேவையில்லை. சிறைப்படுத்தப்பட்ட அத்தகைய கடவுளர்கள் எனக்குத் தேவையே இல்லை.

***நீங்கள் இளமையாக இருந்தபோது நேசிக்கப்பட்டதாக உணரவில்லையா?***

உண்மையில் போதுமானதாக இல்லை. ஆகவேதான் நான் சரியான முறையில் இல்லாத, நேசிக்கப்படுவேன் என்ற நம்பிக்கையில் பல

படிப்பகம்

www.padippakam.com

உறவுகளில் விழ்ந்தேன். ஏனெனில், நேசிப்பதற்கான திறனும் அன்பெனும் உறையில் ஒன்றை நிரப்பும் திறனும் என்னிடம் இருந்தன. மேலும் அதைப் போதுமான திடத்துடன் பரிவர்த்தனை செய்பவரும் இல்லை. வாழ்க்கையின் தற்போதைய இந்தக் காலகட்டம் தான் மிகச் சிறந்தது என நினைக்கிறேன்.

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்திருப்பதைப் போலவும், உடனே வானம் பிரகாசமாவதைக் காணநேர்வதும் நம்பமுடியாதது. எதிர்பாராதவிதமாக மதிய வேளை... நான் எப்பொழுதுமே எதிர்பார்த்ததில்லை இம்மாதியான புகழை. உணர்வுப்பூர்வமான இளைப்பாறல், இந்த முதிர்ந்த வயதில் ஓர் இந்தியருக்கு இவ்வளவு அதிர்ஷ்டம் வாய்த்ததென்பது நம்பமுடியாதது. எனக்கு இப்பொழுது எந்தக் குறையீடுகளும் இல்லை.

**நீங்கள் உங்கள் உறவுகளைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். நீங்கள் நிறைய அழகான கவிதைகளை, சிறந்த கதைகளை, கட்டுரைகளை எழுதியிருக்கிறீர்கள் என்றாலும் மக்கள் இன்னும் உங்களுடைய சுயசரிதையைப் பற்றியே பேசுகிறார்களே. இது உங்களை வருத்தப்படுத்துகிறதா?**

இல்லை. ஆனால் அது எனக்கு நிறைய பணத்தைக் கொண்டுவந்தது. அது எனது கணவருக்கு மிகவும் உதவியது. அது எனது குழந்தைகளுக்கும் நிறைய செல்வத்தைக் கொண்டு வந்தது. எனக்கு இது குறித்து எந்தவிதமான மனக்குத்தலும் இல்லை.

**நீங்கள் உடல்நிலை குன்றியிருந்தபோது உங்கள் சுயசரிதையை எழுதியதாகவும், உங்கள் மருத்துவத்திற்குப் பணம் தேவைப்பட்டது என்றும் நீங்கள் குணமடைவீர்கள் என்று எதிர் பார்க்கவில்லை என்றும் படித்திருக்கிறேன்...**

ஆமாம். அது உண்மைதான். நான் அப்பொழுது நலமாக இல்லை. இந்த ஆலோசனையை எனக்குக் கொடுத்தவர் அதற்காகப் பேரம் பேசிய ஒரு பதிப்பாளர்தான். அதற்காக நான் எந்த வருத்தமும் கொள்ளவில்லை. இது குறித்த குறையீடுகளைக் கொண்ட ஒரே நபர் என் கணவர்தான். ஆனால் அவர் என்னைக் கேட்கவில்லையெனில், நான் இதைச் செய்திருக்கவே மாட்டேன். என்னுடைய திருமண உறவு உறுதியாக இருந்ததற்கும் அது முடிவாக வெற்றியை அடைந்ததற்கும் அதுதான் காரணம். அவர் நான் என்ன செய்யவேண்டுமென விரும்பினாரோ அதையே செய்தேன்.

**இப்பொழுது ஷோபா டே பாலுறவைப் பற்றி எழுதுகிறார். ஆனால் எவருமே அவரை விமர்சனம் செய்வதில்லை. ஆனால் காதலைப் பற்றி நீங்கள் எழுதியபோது...**

ஷோபா டே வித்தியாசமானவர். பெரும் பாலும் அவர் மகிழ்வதைக் குறித்தே எழுதுகிறார். நான் காதலுறவுகளைப் பற்றி எழுதியிருக்கலாம். ஆனால் காமத்துக்கு எப்போதுமே கவர்ச்சியூட்டியதில்லை. காதல் குறித்த ஆபாசம் எதுவுமில்லை. என்னுடைய காதல் ராதை கிருஷ்ணன். காதலின் வடிவமைதி கொண்டது. காதலில் ஏதோ மிக அழகான விஷயமிருக்கிறது. அதை ஒரு கோரமான விஷயமாக என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

**நீங்கள் 'என் கதை' எழுதியபோது ஏன் மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள்?**

இல்லை, அவர்கள் அதிர்ச்சியடையவில்லை. அதிர்ச்சியடைந்ததைப்போல் பாசாங்கு செய்தார்கள். மற்றவர்களிடம் தாங்கள் அறியாமை நிறைந்தவர்கள் என்றும் புனிதமான திருமணத்தின் கட்டுப்பாடுகளை ஒருபொழுதும் மீறியதில்லை என்றும் நிரூபிப்பதற்குத்தான். எவருமே அதிர்ச்சியடையவில்லை. இம்மாதிரியான விஷயங்கள் வருடவருடங்களாக நடந்து கொண்டேயிருந்திருக்கின்றன. நான் நிலப் பண்ணை உரிமை சார்ந்த ஒரு பின்புலத்திலிருந்து வந்தவள். இரவில் ஆண்கள் எப்படித் திரிவார்கள், ஏழைகளின் வீட்டிற்குள் நுழைந்து அவர்களது பெண்களை எப்படிப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவார்கள் என்றும் நன்கு அறிவேன். அவர்கள் கர்ப்பமுற்றால் மூழ்கடிக்கப்படுவார்கள் இவையெல்லாம் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. இவற்றை நாங்கள் அறிந்தவர்களாயிருந்தோம் ஆனால் இது இரவில் மட்டும்தான் நிகழும். நான் எவரையும் கொன்றதில்லை, வெறுத்ததில்லை. நான் எப்பொழுதுமே அன்பொன்றையே விரும்பினேன். உங்களது வீட்டில் அன்பு கிடைக்கவில்லையென்றால் கொஞ்சம் கவனிப்பாரற்ற குழந்தையாக வெளியே திரிவீர்கள்.

*( Rediff இணையதளத்தில் ஷோபா வாரியர் கண்ட நேர்காணலின் குறிப்பிட்ட பகுதிகளின் மொழியாக்கம்)*

*மொழியாக்கம் : மாலினி*

படிப்பகம்

www.padippakam.com



# மு.சத்யாவின்
# 'இங்கு எதுவும் நிகழவில்லை' – கவிதைகள்

## – இளம்பிறை

மு.சத்யாவின் இந்தத் தொகுப்பைப் பற்றி எழுதுவதற்கு முன் கவிதை பற்றிப் பொதுவாக ஏதாவது சொல்லி, பின்னர் தொகுப்பிலுள்ள கவிதைகள் பற்றிய அபிப்ராயங்களைச் சொல்லலாம் என்று சற்றுநேரம் உட்கார்ந்திருந்தேன். கவிதைகளே... எத்தனையோ செய்திகளைப் பேசும்போது அது குறித்துப் பொதுவாகத் தனியாக என்ன சொல்வதென்ற வினா எழுந்தது. பெண்களின் எழுத்து, வாசிப்புத்தளங்களில் பல்வேறுபட்ட பார்வைகள் பதிவாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ''அன்னம் வெளியீடான' 72 பக்கங்கள் கொண்ட மு.சத்யாவின் இங்கு எதுவும் நிகழவில்லை' கவிதைத் தொகுப்பைப் படிக்க நேரிட்டது.

''பாத்திரம் கழுவும் நீரோடுதான்
கைரேகைகள் கிளர்ந்து
ஓடியிருக்க வேண்டும்''

என்று கரைந்துகொண்டிருக்கும் ரேகைகளைப் பதிவுசெய்து கவிதையில் ஓடவிடுகிறார் சத்யா. 'நாவின் முட்கள்' என்ற கவிதையில் வலிமிகுந்த துரதிர்ஷ்ட நாளொன்றினை மறக்கமுடியாமல் தவிக்கிறார். நம்பிக்கை எரிந்ததையும் உலகம் எதிரானதையும்... முத்தத்தில் ரணம் அப்பியிருந்ததையும் அறிந்துகொண்ட அந்நாளில்,

''என் முகத்தில் நான்
எந்த உணர்வுகளைத்
தேக்கி வைத்துக்கொள்வதெனத்
தெரியாமல் போன கணங்கள் அவை''

என்கிறார்.

ஆதிக்கோலத்தில்...

''கோலங்கள் அதிகாலையில் எழுந்து
ஒவ்வொரு வீட்டின் முன்னும்
படுத்துக்கொள்கின்றன''

என்ற புதிய பார்வை வியக்கவைக்கிறது. விளிக்கும் அடைமொழிக்கும்... முடிக்கும் அடைமொழிக்கும் நீளமாய் யோசித்து... ஏதோவொரு சொல்லில் விளித்து எழுதியனுப்பிய பின் இப்படி ஐயப்படுகிறது நெஞ்சு.

''என்றைக்காவது ஒருநாள்
வருத்தப்படுவேனோ!
ஏதாவது ஒன்றைப்
போட்டமைக்காக''

என்று நாம் நாமாக இருக்க... பிரிந்து சென்றுவிடவேண்டும் என்று முடிவெடுத்தாலும்... அதன் பின்பு, ஒன்றுமே செய்ய முடியாததுபோல் ஒரு சோர்வு பாடாய்ப் படுத்தும் என்பதை... அழகாகச் சொல்கிறது இவரது ''சொல்வதொன்றுமில்லை'' இப்படி...

''...............................
...............................
...............................
இதமோரம் இழையோடும் காதல்
இமைகளின் விளிம்பில் சிரிக்கும்
குறும்பு!
கொஞ்சுதல் மற்றும் உன் கெஞ்சுதல்

இதையெல்லாம் விட்டுவிட்டுப் போய்
என்னால் என்ன செய்ய முடியும் சொல்?
அதுதான்...
மூட்டை கட்டிக்கொண்டு
திரும்ப வந்துவிட்டேன்!
அம்மாவிடம் கோபம் போல்
பாவனை செய்துவிட்டு'

என்று சில உணர்வுகள்... கவிதைப்படுத்தாமல் பதிவு செய்திருக்கிறார் என்றாலும் தொடர்ந்த வாசிப்பும்... எழுத்தும் இவரது படைப்பை மேலும் ஸ்திரப்படுத்தும். தவிர... பெயர்ந்துபோன உரலின் அழுகுரல்... மிகச் சரியான செயல்முறைக்குள் ஒளிந்திருக்கும் தவறுகள், கஷ்டப்பட்டு முகம்மலர வேண்டிய நிர்ப்பந்தம், கனத்த திரை ஒன்று மற்ற அறைகளின் சுகங்களிலிருந்து... அடுக்களையைப் பிரிப்பதை கண்டுகொண்ட கூர்மை... இப்படியாக மு.சத்யாவின் கவிதைகள் புதிய நிலைத்த தன்மை நிறைந்ததாய் உள்ளன.

(இங்கு எதுவும் நிகழவில்லை; மு.சத்யா; வெளியீடு : அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சை - 613 007; பக்கங்கள் - 72; ரூ. 30/-)

படிப்பகம்

www.padippakam.com



## ‘தனது ஈரக்கைகளால் நிறமழிக்கும் கவிதைகள்’



அவரவர் மொழி அவரவர் குருதியிலிருந்தே ஊறிவருகின்றது, குளத்தாமரைகளைப்போல எதிர்ப்பு இலக்கியங்கள் எவரை எதிர்த்துப் படைக்கப்படுகின்றனவோ அவர் தலையில் காக்கையின் எச்சம்போல விழுகின்றன. இதற்கான கூறுகளைக் கொண்டிருக்கும் கறுப்பின இலக்கியங்கள் இன்றும் தணிக்கை செய்யப்படுகின்றன. 1992ல் மட்டும் 36,000 நூல்கள் தடை செய்யப்பட்டன. தனது நிலத்திலிருந்தே பிடுங்கி எறியப்படும் தனது வேர், பண்பாட்டு அடையாள மறுப்பு, கலை வடிவங்களின் அபகரிப்பு அல்லது ஒடுக்குமுறை, விட்டு விடுதலையாதலை வேண்டும் ஒரு ‘காட்டுச்செடியின்’ தத்தாரித்தனம், உச்ச அழகியல், எதற்கு என்றாலும் பாட்டும் நடனமும், சமுதாயக் கட்டறுக்கும் பண்பாடு என எல்லாவற்றிலும் தலித் மொழியும் கறுப்பு இன மொழியும் ஒரே நிழலைக் கொண்டு எழுகின்றன. தூக்கலான அங்கதச்சுவையும் இளைத்த நகைச்சுவையும் ஒரு குழந்தையின் அழுகுரலைப் போன்ற சப்தமும் உள்ளடங்கிய இக்கவிதைகள்தாம் கறுப்பின மக்களின் இறுதி சுவாசத்தைச் சுதந்திரப்படுத்தின. 1975ல் கவிதைக்கான Margaret Graham பரிசை வென்ற A.D. Amateshe (Kenya) தொகுத்த கிழக்கு ஆப்பிரிக்கக் கவிதைகளின் மொழியாக்கம்:

படிப்பகம்

www.padippakam.com

## உனது ஆடையில் ஒட்டியிருப்பேன்...

உனது ஆடையில் ஒட்டியிருப்பேன்
ஒரு காட்டுப்புல்லின் விதையைப்போல
உனது தசையைத் துளைப்பேன்
மேலும் உன்னிடம் பிடிவாதமாய்
நான் மன்றாடுவது, என்னவெனில்...

உன்னுடைய ஆடையிலிருந்து
சுண்டி நீக்கவும்
நெருப்பிலே எறிந்துவிடவும்
என்னை அணுகாதே
ஆனால் உனக்குச் சகாயமான
செழிப்பான விளைநிலத்தில்
என்னை நீ உதிர்க்கவேண்டும்

- கவிஞர் Eric S.Ng'maryo
(Tanzania)

## தொழிலாளியின் பாடல்

நாங்கள் குந்தியிருக்கிறோம்
இடது மையம் வலது என
கல்லுடைத்தவாறே நகர்கிறோம்
க்வா! க்வா! க்வா!

எமது கைகள் ரணமாகின்றன
எமது தலைகள் நோவுகின்றன
எமது மூட்டுகள் மரத்துப் போகின்றன
எமது முதுகுகள் முறிகின்றன
கற்களை உடைப்பதில்
க்வா! க்வா! க்வா!

நாங்கள் குந்தியிருக்கிறோம்
பின்னுக்கும் மையத்துக்கும் முன்னுக்குமாய்
நிலத்தை உழுதவாறே நகர்கிறோம்
க்வா! க்வா! க்வா!

வியாகுலமானது எமது பாடல்
எங்களுடைய கண்ணீரை உண்ணுகிறோம்
கந்தல் உடையில்
தேசாந்திரிகளாய் அலைகிறோம்
க்வா! க்வா! க்வா!
அவர்களுக்கு இது கொண்டாட்டமாயிருக்கிறது
நாங்கள் வியர்க்கையிலும்
குருதி சிந்துகையிலும்
அவர்கள் சிரித்து ஆர்ப்பரிக்கிறார்கள்

அவர்களுக்கு இது இன்பமாயிருக்கிறது
பாரம் தூக்குவதிலும் பசியிலும்
நாங்கள் இடறி புரண்டு விழுகையில்
அவர்கள் கண்ணீர்மல்க சிரிக்கின்றனர்
க்வா! க்வா! க்வா! க்வா! க்வா!

- கவிஞர் E.Songoyi
(Tanzania)



www.padippakam.com


## முடிவு ஆரம்பமாகிறது : வார்த்தைகள்

வார்த்தைகள் வார்த்தைகள் வார்த்தைகள்
காற்றில்லாத வார்த்தைகள்
முடிவில்லாத வார்த்தைகள்
செய்கைகளும் அக்கறையின்றி
நெருப்பில்லாத உலைக்களங்களின் மீது
நின்று கவனிக்கிறோம்

சொந்தபந்தங்களின் தலைகள்
நின்று உறுத்துப் பார்க்கின்றன
அவர்கள் வருகிறார்கள் போகிறார்கள்
சிலர் தலை துண்டிக்கப்பட்டு
இறக்கிறார்கள்
உறவினர்க்குத் தலைகள் கிடையாது
அமைதிவேண்டி வேதனையோடு
காத்திருக்கிறார்கள்
ஆனால் சிதறிக்கிடக்கும் எலும்புகளுக்கும்
இரத்தம்தோய்ந்த வெற்றிடத்தின் புகைகளுக்கும்தான்
சமாதானம் கிட்டுகிறது

ஊர்ப்புறத்தில்
யானைகள் தினமும் சண்டையிடுகின்றன
என அறிவேன்
ஆனால் அவைகளின் காலடியில் இருக்கும்
சாமானியப்புற்கள்தாம்
வெடிமருந்தின் தாக்குதலில்
குருதி சிந்துகின்றன பட்டினியிருக்கின்றன மாய்கின்றன

தினந்தோறும் நாங்கள் ஊனப்படுகிறோம்
பரிகாசக்கூத்து தொடர்கிறது
இந்த முறை மீண்டும் வார்த்தைகளின்றி



படிப்பகம்

www.padippakam.com

## 'குழந்தைகளின் தாய்'

தன் குழந்தைகள் என்ன உண்ணுமோவென
விடியல் முதல் அந்திவரை -
அவளது வாழ்க்கையினூடாகத் துருவித்
தேடுகிறாள்
குடும்பத்தினர் புசிக்க
கையிலிருக்கும்சொற்ப உணவைச் சிந்தி
ஏமாற்றுகிறாள்
கடும் உழைப்பால் கொப்புளமான அவளது
கைகள் மழை தொடங்கியது முதல்
பஞ்சக்காலம்வரை
வளமிலாத நிலத்தை உழுகின்றன
தனது பொறுமையின் பீப்பாயை நிறைக்க
துன்பத்தின் தானியங்களைப் பொறுக்கிச்
சேர்க்கிறாள்
குடிபெயர்ந்து பயணிப்பதிலேயே
சொரசொரப்பான அவளது பாதங்கள்
பொழுது புலர்ந்ததிலிருந்து
இரவு திரும்பும்வரை
போராட்டத்தின் தீராத பாதைகளில்
நடக்கின்றன
தண்ணீருக்கான முடிவில்லாத தேடல்
இளைத்த மலைக்குன்றுகளுக்கும் அப்பால்
அவளை அழைத்துச் செல்கிறது
வாழ்க்கையின் அலுப்பு நிலைகளினூடாக,
வேட்டையாடும் பருவத்தோடு சென்றுவிட்ட
தன் காதலனை யெண்ணி
அவள் மனம் வியக்கிறது
அவளது மெல்லிசைக்குரல் முரண்டுபிடிக்கும்
குழந்தைகளைத் தேற்றியவாறு காற்றில்
நிறைகிறது

கடுமையாக உழைக்கும் குலத்தின் மகள்
உனது தந்தையின் பண்ணைக்கு மாடுகளைத்
தந்தவளே!
உனக்காகக் காகங்கள் கரைகின்றன

உன் இளம்சிசு உறிஞ்சிய அதே முலைகளையே
மற்ற குழந்தைகளும் உறிஞ்சுவதைக்
கவனிக்கிறேன்
எனது கண்கள் வியப்பில் கண்ணீரால்
நிறைகின்றன
உனது துணிவு, உனது அர்ப்பணிப்பு,
உன்னைக் குதறும் கேள்விகளை நீ
சகித்துக்கொண்டமை
எங்கள் தந்தைக்கு என்ன நேர்ந்தது?
எங்கள் எல்லோரின் வேதனையற்ற
உறக்கத்திற்கு இதம்தருவதாய்

சுமையிலாத ஓர் இதயத்திலிருந்து வரும்
பாடல்களையே
ஏன் நீ எப்போதும் பாடுகிறாய்?
எப்பொழுது நீ ஓய்வுகொள்வாய் அம்மா?

குழந்தையின் அம்மாவே,
எல்லா நேற்றைய நாட்களும்
உனது தாய்மையின்மீது கட்டப்பட்டவை
நானும் உனது குழந்தையாக இருப்பதால்
முதுமையின் இறுதித்தாக்குதலுக்கு முன்பாக
உன்னிடம் நான் பாடும் பாடலைக்
கேட்பாயாக -
உனது தாய்மையின் பரிவுவேண்டியும்
முழுமையும் ஞானம் கொண்ட
நெருப்பருகேயான கதைகளுக்காகவும்
எல்லோருக்காகவும் உன்னைத் தியாகம் செய்ய
தயாராயிருந்ததற்கும்
இன்றும் நீ காலம்கடந்து வாழும் உனது
திறனுக்கும்
மீண்டும் சூரியன் எழக் காத்திருப்பதற்குமாக

- கவிஞர் A.D.Amateshe
(Kenya)

மொழியாக்கம்:
குட்டிரேவதி

ஓவியங்கள்:
காதே கால்விட்ஸ்



www.padippakam.com



# புகைப்படக் கலைஞர் இமோஜென் கன்னிங்ஹாம் (Imogen Cunningham)

## குட்டிரேவதி

புகைப்படக் கலைஞர்கள் பல சமயங்களில் புகைப்படக் கருவியைத் தனது பக்கமோ, தன்னைச் சார்ந்தவர்கள் பக்கமோ திருப்பிச் சுயப்பரிசோதனைப் படிமங்களைப் பல மடிப்புகள் போர்த்திய அர்த்தங்களுடன் எடுக்கிறார்கள். புகைப்படக் கலைஞர் அந்தப் படம் எழுப்பும் உணர்வுகள் பற்றிய விழிப் புணர்வையும் அது ஏற்படுத்தும் அர்த்தங்களையும் நன்கு அறிந்திருக்கிறார். ஆனால் அந்தப் படங்கள் பற்றிய மதிப்பீடுகள் இரு அணுகு முறைகள் கொண்டிருக்கலாம். ஒன்று அந்தப் புகைப்படத்தை எடுப்பார். இரண்டு அந்தப் புகைப்படத்தில்தான் இடம்பெற்றிருப்பார்.

இமோஜென் கன்னிங்ஹாம் தனது பதினெட்டு வயதில் புகைப்படத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

அவரது காலம் 1883 - 1976 வரையிலானது. 1901-ல் புகைப்படம் எடுக்கத் தொடங்கினார். Gertrude Kasebier என்ற புகைப்படக்கலைஞரின் புகைப்படங்களால் ஈர்க்கப்பட்டுப் புகைப் படத்துறையில் நுழைந்தார். முதலில் ஒரு ஸ்டுடியோவில் பகுதிநேர வேலையாளராகத்தான் பணிபுரிந்தார். பின் ஆல்பிரட் ஸ்டீகிளிட்ஸ், ராபர்ட் லூதர் போன்ற சர்வதேசப் புகழ்பெற்ற புகைப்படக் கலைஞர்களைச் சந்தித்துத் தன்னை இன்னும் உருவேற்றிக்கொண்டார். தனது இல்லத்தில் ஒரு ஸ்டுடியோவைத் தொடங்கினார். நிறைய உருவப்படங்களும் விளக்கப் படங்களும் எடுப்பதில் ஈடுபட்டார்.

இவரது படங்கள் பெரும்பாலும் அகவுணர்வு சார்ந்த நிர்வாணப்படங்களும் அபூர்வமான மலர்வகைகளும்தாம். இந்த இரண்டு வகையான பதிவு முறைகளிலும் நெருக்கமான உறவு இருந்தது. மலர்களை மனித தேகத்தின் சிறு அசைவென்றும், மனித உடல்களைச் சலனமற்ற அமைதி ததும்பும் மலர்களென்றும் தனது படைப்புகளில் வெளிக் கொணர்ந்தார். இயற்கையின் அழகியலை ஒன்றில் ஒன்று ஏற்றிவைப்பதாக இருந்தது. உளவியலின் கற்பித்தலும் வரைகலையின் வெளிப்பாடும் ஒன்றிணைந்ததாக இருந்தன.

புகைப்படக்கலை குறித்த இவரது தத்துவம் மிகவும் குறிப்பிடத்தக்கது. 'குறைந்த நேர கவனிப்பில் ஒரு புரிதலை உணரவும், அமர்ந்திருப்பவரின் குணாம்சம், திறன், ஆன்மாவின் அழகுகளின் நெருங்கிய வீச்சினையும் அதன் சிறப்பியல்புகளையும் வெளிக் கொணர்பவராகவும், அமர்ந்திருப்பவரின் புறக்காட்சியில் அது பிரதிபலிப்பராகவும் இருக்க வேண்டும். இதைச் செய்ய, வெறும் புறஅழகு பற்றி ஒருவர் மிகையுணர்வைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் அதை வழிபடவேண்டுமென்ற அவசியமும் இல்லை. 'அழகிற்காகவே அதை வழிபடுதல் என்பது மிகவும் குறுகிய மனப்பான்மை. பொதுவான காட்சிகளிலிருந்து பெறும் அழகியல் இன்பத்தைக்கூட இதில் நுகரமுடியாது.' இந்தத் தத்துவம் மட்டுமே தனது புகைப்படத்துக்கும் தனக்கும் இடையிலான இடைவெளியை நிரப்ப உதவியதாகக் கூறினார். Vanity fair என்ற இதழுக்காக அவர் பணியாற்றியபோது அந்த இதழாசிரியர், 'எப்படிப்பட்ட மனிதர்களை நீ புகைப்படமெடுக்க விரும்புகிறாய்?' என்று கேட்டார், இமோஜென். 'மிக்வும் அசிங்கமான மனிதர்களை, ஏனெனில் அவர்கள் எப்போதும் அடுத்தவர் மீது குற்றஞ்சாட்டுவதில்லை' என்று பதில் கூறினார். முறையே இயற்கைக்காட்சி, ஆவணப்படப் புகைப்படக்கலைஞர் என்று வரையறுத்துக் கூறப்பட்ட ஆன் சல் ஆடம்ஸ், டோரதியா லாங் மற்றும் இமோஜென் கன்னிங்ஹாம் ஆகிய புகைப்படக் கலைஞர்களுக்கிடையில் ஒருமுறை வகைப்படுத்துதல் மீதான அபாயம் குறித்த கேள்வி எழுந்தபோது, ஒளி தன்மீது விழும் எதையும் தான் புகைப்படமெடுப்பதாகக் கூறி இம்மாதிரியான வகைப் படுத்துதலிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டார் இமோஜென்.

எதிர்ப்பக்கப் புகைப்படங்கள்: (மேலே) Triangles (கீழே) Two Callas

படிப்பகம்

www.padippakam.com

இமோஜென் கன்னிங்ஹாம் (Imogen Cunningham)





'அழகிற்காகவே
ஒன்றை வழிபடுதல்
என்பது மிகவும்
குறுகிய
மனப்பான்மை.
பொதுவான
காட்சிகளிலிருந்து
பெறும் அழகியல்
இன்பத்தைக் கூட
இதில் நுகர
முடியாது'

படிப்பகம்

www.padippakam.com



பஹீமா ஜஹான் கவிதைகள்

ஆப்பிரிக்கக் கவிஞர்கள்

கமலாதாஸ் பக்கங்கள்

சல்மாவின் பச்சை தேவதை

சூல்
பெண்ணிலக்கிய
வெளியீடு

படிப்பகம்